Registered as a Newspaper
பக்கங்கள் – 16
விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 254

செவ்வாய்க்கிழமை
06 ஓகஸ்ட் 2024

ஆடி 21 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முராரி**



"போறபோக்கைப் பார்த்தால் பொதுவேட்பாளர் விசயத்திலையும் குழப்பம் வந்திடும் போலக் கிடக்கே"

# பொதுவேட்பாளர் யார்? நாளையே இறுதிமுடிவு!

யாழ்ப்பாணம், ஓக. 6

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொதுவேட்பாளர் தொடர்பில் நாளை புதன்கிழமையே இறுதி முடிவு அறிவிக்கப் படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

15

## எதிரணியில் அமர நாமல் திட்டமாம்!



கொழும்பு, ஓக. 6

பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப் பாளர் நாமல் ராஜபக்ச உட்பட அவர் சார்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் நாடாளுமன் றத்தில் எதிரணியில் அமர்வதற்கு திட்டமிட் டுள்ளனர் என தெரியவருகின்றது.

ஸ்ரீலங்கா நாடாளுமன்ற அமர்வு கள் இன்று ஆரம்பமாகின்றன.

இந்த நிலையிலேயே, இம் முறை அமர்வில் நாமல் தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர் கள் எதிரணியில் அமர்வதற்குத் தீர்மானித்

15

## பங்களாதேஷில் புரட்சி: பிரதமர் ஹசீனா ஓட்டம்



டாக்கா, ஓக. 6

பங்களாதேஷில் ஏற்பட்ட இளைஞர் புரட்சியை அடுத்து, பிரதமர் ஷேக் ஹசீனா பதவியை உதறிவிட்டு நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளார்.

அவருக்கு இந்தியா அரசியல் தஞ்சம் வழங்கியுள்ளது.

கடந்த ஒரு மாதமாக பங்களா தேஷில் பல்வேறு

15

## கிணற்றிலிருந்து சடலம் மீட்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

பருத்தித்துறை, தும்பளை மாதா கோவில் வீதியிலுள்ள வீட்டுக்கிணற்றிலிருந்து குடும் பத் தலைவர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

செபஸ்ரியாம்பிள்ளை டேவிட் உதயராசா (வயது - 47) என்ற இரண்டு பிள்ளைகளின் தந் தையே இவ்வாறு

15

## தபால்மூல வாக்களிப்பு கால அவகாசம் நீடிப்பு!

கொழும்பு, ஓக. 6

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், தபால் மூல வாக்களிப்புக்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

தபாலில் ஏற்படக்கூடிய தாமதம் மற்றும் ஆணைக்குழு விடம் விடுக்கப்பட்ட கோரிக்கையைக் கருத்திற்

15

## சிசுவின் தலையை சுவரில் மோதினேன்!

### கொல்லப்பட்ட குழந்தையின் தாய் ஒப்புதல்!

கொழும்பு, ஓக.6

அளவெட்டியைச் சேர்ந்த 45 நாள் சிசு உயிரிழந்த விவகாரத்தில், சிசு வின் தலையைச் சுவருடன் மோதிக் கொடூரமாகத் தாக்கியதை விசார ணையில் தாய் ஒப்புக்கொண்டுள் ளார்.

கடந்த சனிக்கிழமை தாய்ப்பால் அருந்திவிட்டு, தூங்கிய சிசு அதி காலையில் நினைவற்றிருந்ததை யடுத்து, அளவெட்டி பிரதேச மருத்து வமனைக்கு சிசு கொண்டு

15

## வாள்கள், முகமூடிகள் பொலிஸாரால் மீட்பு!

யாழ்ப்பாணம், ஓக. 6

யாழ்ப்பாணத்தில் குற்றச்செயல்களை மேற்கொள்வதற் காக மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள், முகமூடிகள் மற்றும் மேலங்கிகள் என்பன பொலிஸாரால் நேற்று மீட் கப்பட்டுள்ளன.


15

## மருத்துவர் அர்ச்சுனாவின் பிணை மனு நிராகரிப்பு

மன்னார், ஓக. 6

மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனாவின் பிணைமனு மன்னார் நீதிவான் நீதிமன்றால் நேற்று நிராகரிக்கப்பட் டுள்ளது.

15



றைனோ சிமென்ட் ரூப்பிங் ஷீட்

சிறந்த விலைக்கு நீண்ட காலம் பாவிக்கக்கூடிய கூரை

RHINO
60 YEARS
www.rhino.lk

ரூ. 3,955/- இலிருந்து துரித அழைப்பு 0115748728 • இலங்கையின் முதற்தர ரூப்பிங் மற்றும் சீலிங் ஷீட் • 60 வருட நம்பிக்கை

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிளிநொச்சி கரைச்சி புளியம் பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தில் மஹோற்சவத் தீர்த்த உற்சவ நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆடி அமாவாசை பிதிர்க்கடன் பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன. (ச-45-113)



## விளையாட்டு விழா

கிளிநொச்சி, ஓக.6

கிளிநொச்சி தெற்கு வலயப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டி தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி பிரதீபா காயத்திரி கஜபதி தலைமையில் கிளிநொச்சி பொது மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கிளிநொச்சி மேலதிக மாவட்டச் செயலர் (காணி) திருமதி நளாயினி இன்பராஜ் கலந்து கொண்டார்.

நிகழ்வின் போட்டிகளின் அடிப்படையில் பூநகரி மத்திய கல்லூரி ஆண்கள் முதலிடத்தையும், கிளிநொச்சி மகா வித்தியாலய மாணவிகள் முதலிடத்தையும் பெற்றுக் கொண்டனர். (ச-45-13)

## அமெரிக்காவில் அற்புதம்மாள்

யாழ்ப்பாணம், ஓக.6

ஏழு தமிழர் விடுதலைக்கான போராட்டத்தில் தன் வாழ்வின் பெரும் பகுதியை அர்ப்பணித்து ஓயாது போராடிய பேரறிவாளனின் தாயார் அற்புதம்மா அமெரிக்க வாழ் இலங்கை தமிழ்ச் சமூகத்தைச் சந்தித்து கலந்துரையாடவுள்ளார். சாத்தியமாக்கிய அற்புத தாயான அற்புதம்மாளுடன் பல வட அமெரிக்க தமிழ் அமைப்புகளின் ஏற்பாட்டில் 'அற்புதம் அம்மாளுடன் ஓர் இனிய மாலைப் பொழுது' என்ற தலைப்பில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3.00 மணிக்கு நியூஜெர்சியிலும் அட்லாண்டா தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் ஒகஸ்ட் 17 சனிக்கிழமை அட்லாண்டா நகரிலும் உலகத் தமிழ் அமைப்பின் ஏற்பாட்டில் எதிர்வரும் 18 ஞாயிற்றுக்கிழமை வொஷிங்டனிலும் இந்த நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ச-100)

# எல்லைதாண்டுவதை நிறுத்துவதே நல்லது

### கடற்றொழிலாளர் கூட்டமைப்பு அமைப்பாளர் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஓக. 6

எல்லைதாண்டி மீன்பிடித்த இந்திய மீனவர் ஒருவர் இறந்த துன்பியல் சம்பவமானது மன வேதனை அளிக்கிறது. இனிவரும் காலங்களிலாவது எல்லைதாண்டி வருவதை இந்திய மீனவர்கள் நிறுத்தினால் தேவையற்ற அசம்பாவிதங்களை தடுக்கலாம்.

-இவ்வாறு அகில இலங்கைத் தொழிலாளர் சமூகங்களின் கூட்டமைப்பின் தேசிய அமைப்பாளர் என்.வி.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஒரு இறையாண்மை மிக்க நாடு. எமது நாட்டு கடற்படைகள் ரோந்து நடவடிக்கையை மேற்கொள்ளும்போது இந்தத் துன்பியல் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

எல்லைதாண்டி மீன்பிடிக்க வருவதை தவிர்த்தால் இவ்வாறான துன்பியல் சம்பவங்களைத் தடுக்கலாம் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-27)

## மரதன் ஓட்டம்!

முல்லைத்தீவு, ஓக.6

வடமாகாணப் பாடசாலைகளுக்கிடையிலான மரதன் ஓட்டப்போட்டி வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்டச்செயலகம் முன்பாக நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டு குமுழமுனை மகா வித்தியாலய முன்றலில் நிறைவடைந்தது. மரதன் ஓட்டப்போட்டியில் முதலிடத்தைப் பிடித்தவர்களுக்கு தங்கப்பதக்கமும், முதல் 10 இடங்களைப் பெற்ற ஆண் மற்றும் பெண் வீரர்களுக்கு சான்றிதழ்களும், நினைவுக்கேடயமும் வழங்கிவைக்கப்பட்டன.

ஆண்கள் பிரிவில் முதலிடத்தை முல்லைத்தீவு முத்தையன் கட்டு இடதுகரை அ.த.க.பாடசாலையின் மாணவன் விதுசனும் பெண்களுக்கான போட்டியில் முதலிடத்தை புங்குடுதீவு மத்தியகல்லூரிமாணவி அபர்ணாவும் பெற்றுக்கொண்டார் (ரி-19)



சுழிபுரம் மேற்கு கலைமகள் விளையாட்டுக்கழக மென்பந்தாட்ட வீரர்களின் சீருடை அறிமுக நிகழ்வு, கழக மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது. நிகழ்வில், சமூக மட்ட அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சீருடைகளை அறிமுகம் செய்து வைத்தனர். (ப-125)



சாவகச்சேரி, கோயிற்குடியிருப்பு சந்தனமுதலிச்சிபுலம் முருகமூர்த்தி கோவில் வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த்திருவிழா நேற்றுமுன்தினம் சிறப்புற நடைபெற்றது. (ச-9)



## கைவினைப் பொருள் பயிற்சி நிறைவு நாள்

யாழ்ப்பாணம், ஓக. 6

வடக்கு மாகாணத் தொழிற்றுறைத் திணைக்களத்தினால் ஜே/205 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட ஏழாலை வடக்கு கிராம அலுவலர் பிரிவில் நடத்தப்பட்ட பனையோலைசார் கைவினைப் பொருள்கள் தயாரித்தல் தொடர்பான பயிற்சியின் நிறைவு நாள் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (ச-66)

## நூல்களின் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஓக.6

மூத்த எழுத்தாளர் கலாநிதி ந.இரவீந்திரனின் 'ஜீவநதி ஆளுமைச் சிறப்பிதழ்' மற்றும் 'ஏகாதிபத்தியம் சுயநிர்ணய உரிமை மக்கள் இலக்கியம் ஆகிய நூல்களின் அறிமுக நிகழ்வு பண்டத்தரிப்புக் காலையடி மறுமலர்ச்சிமன்ற அரங்கில் நாளை செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெறவுள்ளது. (ரி-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓயாத பிரபஞ்சம்



## அன்பால் அமைந்த செல்வங்களே,

இலங்கையின் குழந்தை செல்வங்களை நல்லதோர் பிரஜையாக உருவாக்கும் நோக்கத்தினூடாக இரண்டு வருடங்களுக்கு முன்னதாக நாம் பிள்ளையார் சுழியிட்டுத் தொடங்கிவைத்த 'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தினை, ஜனாதிபதி தேர்தல் சார் சட்ட ஒழுங்குகள் கடுமையாக கடைப்பிடிக்கப்படும் இந்த சமயத்தில் தற்காலிகமாக இடைநிறுத்தப்படக்கோரி தேர்தல்கள் ஆணைக்குழு என்னிடம் கேட்டுக்கொண்டுள்ளது.

பொது நிதியிலிருந்து ஒற்றைச் சதம் கூட இது வரை செலவழித்திராத போதிலும் கூட தேர்தலை முன்னிட்டு இந்த கோரிக்கையை நிறைவேற்றுவது நாட்டின் சட்ட ஒழுங்கை மதிக்கும் அரச கொள்கை வகுப்பாளரான எனது தலையாய கடமையாகும். ஆகையினாலே ஜூலை 29 முதல் செப்டம்பர் 22 வரையில் 'பிரபஞ்சம்' வேலைத்திட்டத்தினை தற்காலிகமாக இடைநிறுத்த வேண்டியத் தேவை காணப்படுகின்றது. இதனை வேதனை சுமந்த நெஞ்சத்துடன் நாட்டின் நாற்பத்து மூன்று இலட்சம் எனதருமை குழந்தை செல்வங்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றேன்.

'பிரபஞ்சம்' வேலைத்திட்டம் தொடங்கப்பட்ட நாள் தொட்டு இன்று வரையில் இலங்கை முழுவதிற்குமான பரம்பல் காணப்படும் வகையில் நாடுமுழுவதிலும் முன்னூற்று எண்பத்து ஐந்து பாடசாலைகளுக்கு (385) நவீன வகுப்பறைகள் கட்டிக்கொடுக்கப் பட்டுள்ளதனையும், பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துத் தேவைகளை கருத்திற்கொண்டு எண்பத்து ஒன்பது (89) பாடசாலை பேரூந்துகள் பெற்றுக் கொடுக்கப் பட்டுள்ளமையினையும் பணிவன்புடனும் பெருமையுடனும் இங்கே பதிவு செய்கின்றேன். தாய்நாடு மற்றும் குழந்தைகளை நேசிக்கும் ஒரு தகப்பனாக ஒரு நற் பிரஜையாக இவற்றினை எதிர்காலத்திலும் என் வாழ்நாள் முழுவதிலும் முன்னெடுத்து செல்வேன் என்பதனையும் மார் தட்டி பதிவு செய்கின்றேன்.

எனவே செப்டம்பர் 21 ஆம் திகதி நாட்டின் தலைவராக நான் பொறுப்பேற்றப் பின்னர் இந்த பொன்னான வேலைத்திட்டம் மீள தொடங்கப்படும் என்பதனை உங்களிடம் பேரன்போடு பகிர்ந்து கொள்கின்றேன். அதன் படி, முன்னூற்று எண்பத்து ஆறாவது (386) 'பிரபஞ்சம்' நவீன வகுப்பறைகள் கட்டுவிக்கும் திட்டத்தை அம்/மடவலலந்தை மஹா வித்தியாலயத்தில் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைப்பதற்கான அத்தனை முன்னெடுப்புகளும் இன்றளவில் செம்மையாக திட்டமிடப்பட்டுள்ளன.

அந்நாள் முதல், 2025 டிசெம்பர் 31 ஆம் திகதிக்குள் இலங்கையிலிருக்கும் 10,096 பாடசாலைகள் மற்றும் 822 பிரிவெனாக்கள் உட்பட 126 தனியார் பாடசாலைகளையும், நவீன வகுப்பறைகளாக கட்டியெழுப்புவதோடு நிறுத்திவிடாமல் அவற்றினை நவீன பாடசாலைகளாக அபிவிருத்தி செய்வதனை அரசின் பண்பட்ட கடமையாக கொண்டு எம்மூடாக நடத்திக்காட்டுவோம் என்பதனை அன்பால் உறுதிமொழிகிறேன்.

அதனடிப்படையில், செயற்கை நுண்ணறிவு அடிப்படையிலான (AI) நவீன தொழிநுட்ப அறிவால் நிறைந்த பிரஜைகளை இலங்கை மண்ணிலிருந்து உலகத்தின் ஏனைய நாடுகளுக்கு வழங்க இந்த இருபத்து இரண்டாம் நூற்றாண்டினை நாம் வடிவமைப்போம்.

அன்பார்ந்த குழந்தைகளே, அதுவரையில் உங்களுக்கும், உங்களது அன்புப் பெற்றோர்களுக்கும், ஆசிரியர் - அதிபர்களுக்கும் தைரியமும் ஆரோக்கியமும் நிறைந்த எதிர்காலம் அமைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்க இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்கின்றேன்.

நான்,
பேரன்போடு,

சஜித் பிரேமதாச
06.08.2024

சகலருக்கும் வெற்றி ஐக்கியமான நாடு




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எதிர்க்கட்சித் தலைவருக்காக 100 கூட்டங்கள் நடத்தும் ஐ.ம.ச.

கொழும்பு, ஓக.6

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிவாகை சூடுவதற்காக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் 100 பிரதான கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

ஐக்கிய மக்கள் கூட்டணியின் முதலாவது பிரதான தேர்தல் பரப்புரைக் கூட்டம் எதிர்வரும் 16 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அன்று முதல் சஜித் தலைமையில் 100 பிரதான கூட்டங்களை நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

அத்துடன் நின்றுவிடாது 160 தேர்தல் தொகுதிகளில் மத்திய மட்டத்தில் 400 முதல் 600 வரையான தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் நடத்தப்படவுள்ளன. அதேபோல கிராமிய மட்டங்களில் தெளிவுபடுத்தல் கூட்டங்களும் இடம்பெறவுள்ளன-என்றார். (எ-44)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் பயிற்சி பெற்றுப் பரீட்சைத் திணைக்களத்தால் நடத்தப்பட்ட தேர்வில் சித்தியடைந்த ஆசிரியர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கலாசாலை முதல்வர் ச.லலீசன் தலைமையில் எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கும், மு.ப 11.30 மணிக்கும் இரண்டு அமர்வுகளாக கலாசாலையின் ரதிலட்சுமி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்த நிகழ்வில் இசுருபாய கல்வி அமைச்சின் கல்வி வெளியீட்டுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் தி.ஜோன்குயின்ரஸ் பிரதமவிருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். நிகழ்வில் 238 ஆசிரியர்கள் பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான தகைமைப் பத்திரங்களைப் பெறவுள்ளனர் என்று கலாசாலையின் முதல்வர் தெரிவித்தார். (ரி-66)

# மகப்பேற்று விடுதியை இயக்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஓக.6

கிளிநொச்சி, வேரவில் மருத்துவமனையில் மகப்பேற்று விடுதி உள்ள போதும் அது இயங்குவதில்லைஎன்றுபிரதேசமக்கள்சுட்டிக்காட்டுகின்றனர். மகப்பேற்றுக்காக கர்ப்பிணிகள் முழங்காவில் ஆதார மருத்துவமனை அல்லது கிளிநொச்சி பொது மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்படுகின்றனர். இந்த மருத்துவமனையில் இரு மருத்துவர்கள் பணியில் உள்ள போதிலும் இருவரும் ஒரே நேரத்தில் கடமையில் இருப்பதில்லை. 2010 ஆம் ஆண்டில் இருந்து இரு மருத்துவர்களை பணியில் ஈடுபடுத்தக் கோரிக்கை விடுக்கப்பட்டு வருகின்றது. ஆனால் அந்தக் கோரிக்கை கவனத்தில் எடுக்கப்படவில்லை. கட்டட வளங்கள் உள்ள போதும் தாதியர்கள், மருத்துவமாதுக்கள் மருத்துவமனையில் பணியில் இல்லாததால் மகப்பேற்று விடுதி செயலிழந்துள்ளது. வேரவில் பிரதேச மருத்துவமனையில் மகப்பேற்று விடுதியை இயக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (எ-45-13)

# கடையில் திருட்டு முயற்சி இருவர் மடக்கிப் பிடிப்பு

முல்லைத்தீவு, ஓக.6

புதுக்குடியிருப்பில் திருட்டு முயற்சியில் ஈடுபட்ட இருவர் பிரதேச இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டுப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு, புதுக்குடியிருப்புப் பகுதியிலுள்ள வர்த்தக நிலையங்களில் தொடர்ச்சியாக திருட்டுகள் நடைபெறுகின்றன என்று பிரதேச மக்கள் கூறுகின்றனர். புதுக்குடியிருப்பு சிவநகர்ப் பகுதியில் அமைந்துள்ள வர்த்தக நிலையமொன்றிலும் அண்மையில் திருட்டு நடந்திருந்தது. இந்தநிலையில், அதே வர்த்தக நிலையத்தில் திருட்டில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டு, இருவர் கடந்த வியாழக்கிழமை சிவநகர் இளைஞர்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு புதுக்குடியிருப்பு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்பில் தொடரும் திருட்டுகள் தொடர்பாக கடும் நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாரிடம் பொது அமைப்புகள் வேண்டுகோள் விடுத்துள்ளன. (எ-25,13)

# ஆடிப்பூர உற்சவம்

யாழ்ப்பாணம், ஒக.6

சுன்னாகம் மயிலணி ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தின் ஆடிப்பூர உற்சவம் நாளை புதன்கிழமை காலை 7.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

உற்சவத்தைத் தொடர்ந்து காலை 8.30 மணிக்கு சுன்னாகம் ஐயனார் ஆலயத்துக்கு அண்மையில் உள்ள சுன்னாகம் மகாகாளி அம்மன் ஆலயத்திலிருந்து பாற்காவடி ஆரம்பமாகி மேற்படி ஆலயத்தை ஊர்வலமாக வந்தடைந்து பாலாபிஷேகம் இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாற்காவடி எடுத்து நேர்த்திக் கடன் நிறைவேற்ற விரும்பும் அடியவர்கள் தங்கள் பெயர்களை முற்கூட்டியே ஆலயத்தில் பதிவு செய்யுமாறு ஆலயப் பிரதமகுரு சிவஸ்ரீ. நா.சிவசங்கரக் குருக்கள் தெரிவித்தார். (எ-ரி-66)



கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தின் 150 ஆவது ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு பசுமையும் இயற்கையும் எனும் தொனிப் பொருளில் மரம் நடுகை நிகழ்வு அதிபர் தங்கீஸ்வரன் தலைமையில் வித்தியாலய வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது. (ரி-17)

மன்னார் கீரி பிரதேசத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முருகன் ஆலயத்தின் அலங்கார உற்சவமும், தீர்த்த உற்சவமும் ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் ஸ்ரீ விஜயபாகு குருக்கள் தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. காலை 7 மணிக்கு பூஜைகள் ஆரம்பமாகி 9 மணிக்கு சுவாமி தீர்த்தம் காண்பதற்கு கடற்கரைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுடன் ஆடி அமாவாசை தர்ப்பணமும் செய்யப்பட்டது. (ரி-213)



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** புதிய முயற்சிகளில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும். உறவினர்களாலும் நண்பர்களாலும் அலைச்சலும் செலவுகளும் ஏற்படும். தந்தைவழி உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்பட்டு நீங்கும். வீண்செலவுகள் மனதை சஞ்சலப்படுத்தும்.

**இடபம்:** செயல்கள் அனுகூலமாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். வாழ்க்கைத்துணையுடன் ஏற்பட்டிருந்த மனவருத்தங்கள் நீங்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த பணவரவு உண்டாகும். வீட்டில் உள்ளவர்கள் உங்கள் ஆலோசனையைக் கேட்டுச் செயற்படுவார்கள். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும். எதிரிகளால் ஏற்பட்ட இடையூறுகள் விலகும்.

**கடகம்:** உற்சாகமான நாள். புதிய முயற்சிகள் வெற்றிகரமாக நிறைவேறும். எதிரிகளால் ஏற்பட்ட தொல்லைகள் நீங்கும். பிள்ளைகள் வழியில் எதிர்பார்த்த காரியம் இழுபறியாகும். நண்பர்கள் மூலம் பணவரவுக்கு வாய்ப்பு உண்டு.

**சிம்மம்:** குடும்பத்தில் சிறுசிறு சலசலப்பு ஏற்பட்டாலும், சமயோசிதமாக சமாளித்து விடுவீர்கள். தேவையான பணம் கையில் இருந்தாலும் எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். கணவன் மனைவிக்கிடையே அந்நியோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** தேவையான பணம் கிடைக்கும். சகோதரர்கள் பணம் கேட்டு நச்சரிப்பார்கள். சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. தாயின் உடல் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

**துலாம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும். ஆனால், குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவுகள் எதையும் எடுக்கவேண்டாம். பிள்ளைகள் பிடிவாதம் பிடிப்பார்கள். தக்க முன்னெச்சரிக்கை அவசியம். வியாபாரம் வழக்கம்போலவே இருக்கும்.

**விருச்சிகம்:** சகோதர வகையில் எதிர்பார்த்து இழுபறியாக இருந்த காரியம் அனுகூலமாக முடியும். சிலருக்கு வீண் செலவுகள் ஏற்படும். கணவன் மனைவிக்கிடையே சிறுசிறு விவாதங்கள் ஏற்படக்கூடும்.

**தனுசு:** முக்கியமான முடிவு எடுப்பதைத் தவிர்ப்பது நல்லது. மனதில் தேவையற்ற குழப்பம் ஏற்பட்டு நீங்கும். உறவினர்கள் வகையில் தேவையற்ற பிரச்சினை ஏற்படும் என்பதால் பொறுமை அவசியம்.

**மகரம்:** தன்னம்பிக்கையுடனும் தைரியத்துடனும் செயற்படுவீர்கள். தொடங்கும் காரியம் அனுகூலமாக முடியும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். செலவுகள் அதிகரித்தாலும் அதனால் மகிழ்ச்சியே உண்டாகும்.

**கும்பம்:** இன்று நீங்கள் மேற்கொள்ளும் புதிய முயற்சி சாதகமாக முடிவதுடன், அதனால் எதிர்பார்த்த ஆதாயமும் கூடுதலாகக் கிடைக்கும். எதிரிகளின் சூழ்ச்சிகளை முறியடிப்பீர்கள். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும்.

**மீனம்:** காரியங்கள் அனுகூலமாக முடியும். அதிகப்படியான செலவுகள் ஏற்பட்டாலும் சமாளித்துவிடுவீர்கள். தந்தையிடம் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். குடும்பம் தொடர்பான முக்கியமான முடிவு எடுப்பதற்கு உகந்த நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்


## ஷேக் ஹசீனாவும் ஸ்ரீலங்காத் தேர்தலும்

பங்களாதேஷில் ஏற்பட்ட இளைஞர்கள் புரட்சியைத் தொடர்ந்து பதவி விலகுவதாக அறிவித்திருக்கின்றார் பிரதமர் ஷேக் ஹசீனா. இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உயிருக்குப் பயந்து எவ்வாறு ஓடித்தப்பினாரோ அவ்வாறுதான் ஷேக் ஹசீனாவின் அரசியலும் முடிவுக்கு வந்திருக்கின்றது. பதவியை உதறிய பின்னர், நாட்டைவிட்டுத் தப்பியோடியிருக்கும் அவருக்கு இந்தியா அடைக்கலம் கொடுத்துக் காத்திருக்கின்றது.

பங்களாதேஷை ஒரு தசாப்தத்துக்கும் மேலாகக் கட்டியாண்டு, தனிப்பெரும் ராணியாக வாழ்ந்த பிரதமர் ஹசீனா பதவி விலகி - இருக்க இடமின்றி-இன்னொரு நாட்டுக்குத் தப்பியோடியமைக்கு, இளைஞர்கள் தங்களின் எதிர்காலம் தொடர்பில் கொண்டிருந்த அச்சமான நிலைதான் பிரதான காரணம் என்றால் அதில் இரண்டாம் கருத்துக்கு இடமில்லை. தெற்காசியாவில் வேலை வாய்ப்புகள் மிகக்குறைவாக ஏற்படுத்தப்படும் நாடுகளில் ஒன்றான பங்களாதேஷில் அண்மையில் வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டுச் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட தியாகிகளின் குடும்பங்களுக்கு அரசாங்க வேலையில் 30 வீதமான ஒதுக்கீட்டை வழங்குவதற்கு அந்தச் சட்டம் வழிவகைகளை ஏற்படுத்தியது. ஏற்கனவே வேலையில்லாத் திண்டாட்டத்தில் இருந்த பங்களாதேஷ் இளைஞர்களுக்கு இந்தச் சட்டம் வெந்தபுண்ணில் வேலாகப் பாய்ந்தது. இதுதான் பங்களாதேஷில் இன்று பற்றியெரிந்து கொண்டிருக்கும் பெரும் காட்டுத் தீக்கான ஆரம்பப் பொறி.

பங்களாதேஷின் நிகழ்காலம், இலங்கையின் நிகழ்காலத்தைப் பிரதியெடுத்தாற்போல்தான் இன்று காணப்படுகின்றது. இலங்கையில் அரச வேலை வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருடங்கள் கடந்துவிட்டன. பொருண்மியச் சுமையாலும் வரியேற்றங்களாலும் தனியார்துறையும் நாளுக்குநாள் நலிவு நிலையையே எதிர்கொண்டுள்ளது. வேலைவாய்ப்பின்மை, வேலை இழப்புகள், ஊதிய உயர்வின்மை, வேலை தொடர்பான நிச்சயமற்ற நிலை இவைதான் இன்று இலங்கை இளைஞர்களுக்குப் பெரும் தலைவலியான விடயங்கள். இவ்வாறானதொரு பின்னணியில்தான் ஜனாதிபதித் தேர்தலுக்கு இலங்கை தயாராகிக் கொண்டிருக்கின்றது. ஆனால், இலங்கை இளைஞர்களுக்கு மீண்டும் ஓர் அரகலயவோ அல்லது பங்களாதேஷில் இடம்பெற்றுக் கொண்டிருப்பதுபோன்ற பெரும் கலவரங்களோ இன்று அவசியமற்றவை. ஏனெனில் தங்களின் எதிர்ப்பை ஜனநாயகவழியில் வெளிப்படுத்த இளைஞர்களுக்கு தற்போது ஆகப்பெரும் வாய்ப்பொன்று ஜனாதிபதித் தேர்தல் வழியாகக் கிட்டியிருக்கின்றது.

பங்களாதேஷில் இடம்பெற்றுவரும் கலவரங்கள் மூலம் இலங்கையின் ஆட்சியாளர்கள் இன்னொரு விடயத்தையும் புரிந்துகொள்ளவும்-தெளிந்துகொள்ளவும் வேண்டும். பொதுத் தேர்தலுக்குப் பின்னர் போக்குவரத்துச் சுமைகளும், வேலைவாய்ப்பற்ற நிலையும் இல்லாமல் செய்யப்படும் என்ற வாக்குறுதியை ஷேக் ஹசீனா வழங்கியிருந்தார். அவை நிறைவேற்றப்படாத நிலையில், வெறும் இரண்டு மாதங்களே, அவரால் புதிதாக ஆட்சியமைத்த பின்னர் நிலைக்க முடிந்திருக்கின்றது. இலங்கையிலும் இப்போது ஏராளம் வாக்குறுதிகள் அள்ளி வீசப்பட்டுக்கொண்டிருக்கின்றன. 'பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை நாலும் கலந்துனக்கு நான் தருவேன், கோலஞ் செய் வாக்காளனே! தங்கமான வாக்கை எனக்குத்தா' என்று பாடாத குறையாக, ஏட்டிக்குப்போட்டியாக வாக்கைப் பெறுவதற்காக, ஜனாதிபதி வேட்பாளர்கள் வாக்குறுதிகளை விளாசிக் கொண்டிருக்கின்றனர். இலங்கை இளைஞர்களுக்கு அரகலய புதிதல்ல. இந்தப்புரிதல் ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு இருந்தால், கோத்தாபயவுக்கும், ஷேக் ஹசீனாவுக்கும் நிகழ்ந்த கதியைத் தவிர்க்கலாம்.




# தேர்தலில் வாக்களிக்க 1,71,10,354 பேர் தகுதி

**கொழும்பு, ஓக.6**

**இலங்கையில் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரத்து 354 வாக்காளர்கள் தகுதி பெற்றுள்ளனர்.**

2024 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலின்படி, ஒவ்வொரு தொகுதியிலும் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை தேர்தல் ஆணைக்குழுவால் அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி கொழும்பு மாவட்டத்தில் 17 லட்சத்து 65 ஆயிரத்து 351 பேரும், கம்பஹா மாவட்டத்தில் 18 லட்சத்து 81 ஆயிரத்து 129 பேரும், களுத்துறை மாவட்டத்தில் 10 இலட்சத்து 24 ஆயிரத்து 244 பேரும் வாக்களிக்க தகுதிபெற்றுள்ளனர். யாழ். தேர்தல் மாவட்டத்தில் 5 இலட்சத்து 93 ஆயிரத்து 187 பேரும் (யாழ். - 492,280, கிளிநொச்சி 100, 907) வன்னி மாவட்டத்தில் 3 இலட்சத்து 6 ஆயிரத்து 81 பேரும் ( வவுனியா 128,585, மன்னார் 90,907, முல்லைத்தீவு 86,889) வாக்காளர் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளனர். (எ-44)

## இலங்கைப் பாடகர்கள் குவைத்தில் கைது

'வெளிநாட்டில் இருக்கும் நாங்கள்' (எதெர அபி) எனக் கூறப்படும் அமைப்பின் மூலம் நடத்த தீர்மானிக்கப்பட்டிருந்த இசை நிகழ்ச்சி ஒன்றுக்காக குவைத் நாட்டுக்குச் சென்ற இலங்கையைச் சேர்ந்த பிரபல பாடகர்கள் உட்பட 26 இலங்கையர்கள் அந்தநாட்டுப் பாதுகாப்புத் துறையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்ட 26 பேரில் 24 பேரை விடுவிக்க குவைத் நாட்டில் உள்ள இலங்கைத் தூதரகம் நடவடிக்கை எடுத்துள்ளது. இசை நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த இருவரை விடுவிப்பதில் தாமதம் ஏற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. முறையான அனுமதியின்றி நிகழ்ச்சியை ஏற்பாடு செய்தமையே கைதுக்கான காரணம் என்று தென்னிலங்கை ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (எ-இ)

## நிகழ்நிலைச் சட்டத்தை இரத்துச் செய்யக் கோரிக்கை

கொழும்பு, ஓக.6

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்று 41 தொழிற்சங்கங்கள் கோரிக்கை விடுத்துள்ளன. இது தொடர்பாக அந்தத் தொழிற்சங்கங்கள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளன.

இந்தச் சட்டம் நாட்டின் பிரஜைகளின் கருத்துச் சுதந்திரத்தை ஒடுக்குகின்றது என்றும், நிகழ்நிலை சுதந்திரத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்துகின்றது என்றும் அந்தக் கடிதத்தில் தொழிற்சங்கங்கள் குறிப்பிட்டுள்ளன. (எ-இ)

## தேர்தல் முறைப்பாடு விசேட வேலைத்திட்டம்

ஜனாதிபதித் தேர்தலின் போது அரச அதிகாரிகளால் தேர்தல் சட்டம் மீறப்படுமாயின் அது தொடர்பான முறைப்பாடுகளைப் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு விசேட வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது. 0767914696 எனும் தொலைபேசி இலக்கத்திற்கோ அல்லது 011250 5566 எனும் தொலைநகல் இலக்கத்துக்கோ முறைப்பாடுகளைச் சமர்ப்பிக்க முடியுமென இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. (எ- 66)

## வட்டி வீதங்களை திருத்த யோசனை

கொழும்பு, ஓக. 6

சிரேஷ்ட பிரஜைகளின் வங்கி வைப்புத் தொகைக்கான வட்டி வீதத்தை திருத்துவதற்கான தீர்வு யோசனை அடங்கிய அறிக்கை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார்.

ருவன்வெல்ல பிரதேசத்தில் இன்று காலை இடம்பெற்ற நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியால் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின் படி, திறைசேரி வழங்கக் கூடிய பதில் தொடர்பில் தயாரிக்கப்பட்ட அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் சாதகமான பதில் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-இ)

**நாளை**

07.08.2024

புதன்கிழமை - ஆடி - 22

சுபநேரம் : 04.34 - 06.04

ராகுகாலம் : 12.04 - 01.34

**நாளொரு நல்வார்த்தை**

கடந்த கால நினைவலைகள் மனிதனை அறிவாளி ஆக்குவதில்லை; வருங்காலம் பற்றிய பொறுப்புணர்ச்சியே அறிவாளிக்கு அடையாளம்.

- பெர்னாட்ஷா -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# களம் தந்த களங்கம் தென்மோடிக்கூத்து

யாழ்ப்பாணம், ஓக. 6

குருநகர் புனித யாகப்பர் ஆலயத் திருவிழாவை முன்னிட்டு, குருநகர் இளைஞர் கலைக்கழகம் ஏற்பாடு செய்த, குருநகரின் மூத்த குருக்கள் கௌரவிப்பு நிகழ்வும் 'களம் தந்த களங்கம்' தலைப்பிலான தென்மோடிக்கூத்து நிகழ்வும், குருநகர் கலையரங்கில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றன.

பங்குத்தந்தை அருட்பணி யாவிஸ் அடிகளாரின் தலைமையில் குருநகர் இளைஞர் கலைக்கழக நிர்வாகி கிளமென்ட் நெல்சனின் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற நிகழ்வில், குருநகரைச் சேர்ந்த அருட்தந்தையர்களான அருட்பணி ஜெயசீலன் அடிகளார், அருட்பணி ஒல்பன் இராஜசிங்கம் அடிகளார், அருட்பணி இருதயதாஸ் அடிகளார் ஆகியோரும், குருநகரைச் சேர்ந்த கலைஞர்களான கலையார்வன், குருசுமுத்து இராயப்பு, கலைஞானச்செல்வன் அரியநாயகம் அன்றுயூலியஸ் ஆகியோரும் கௌரவிக்கப்பட்டனர். (ப-27)



# மன். மருத்துவமனையில் பயிர்ச்செய்கை

**மன்னார், ஓக. 6**

**நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளுக்கும் முன்மாதிரியாக மன்னார் பொது மருத்துவமனை வளாகத்தில் பயன்தரு பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.**

மன்னார் பொது மருத்துவமனை வளாகத்தில் காணப்படும் நிலப்பகுதியில் உடல் நலத்துக்குப் பயன்படும் வகையிலான தாவரங்களை பயிரிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக மன்னார் பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவக் கலாநிதி எம்.எச்.எம். அஸாத் தெரிவித்துள்ளார்.

இந்தப் பயிர்ச் செய்கையில் கிடைக்கும் வருமானத்தில் மருத்துவமனையில் சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கு உதவிகள் வழங்கப்படவுள்ளன.

அத்துடன் மருத்துவமனையை பசுமையாக மாற்றுவதற்கும் வளி மாசடைவை குறைப்பதற்கும் இந்தச் செயற்றிட்டம் பயனளிக்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-60)



மன்னார் பேசாலை புனித வெற்றி நாயகி ஆலய பங்கின் கீழ் இயங்கி வரும் அமலதாசன், சென்.மேரிஸ் மற்றும் விக்றரிஸ் ஆகிய மூன்று முன்பள்ளிகள் இணைந்து நடத்திய சிறார்களின் விளையாட்டு நிகழ்வு பேசாலை பங்குத் தந்தை அருட்பணி சத்தியராஜ் அடிகளார் தலைமையில், புனித வெற்றி அன்னையின் ஆலய முன்றலில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது. (ச-22,60)

கீரிமலைக் கடலில்

# தீர்த்தமாடிய மாவைக்கந்தன்

யாழ்ப்பாணம், ஓக. 6

வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி ஆலயக் காம்யோற்சவப் பெருவிழாவின் தீர்த்தத் திருவிழா ஆடி அமாவாசை நாளான நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கீரிமலைக் கண்டகி கடலில் சிறப்பாக இடம்பெற்றது.

தீர்த்தோற்சவத்தைத் தொடர்ந்து இறந்த தமது தந்தையர்களுக்காகப் பெருமளவான சிவாச்சாரியார்கள் முன்னிலையில் பிதிர்த் தர்ப்பணங்களை நிறைவேற்றிக் கொண்டனர். (ச-66)








# முக்கொம்பன் ம.வி. கைப்பந்தில் சாதனை

கிளிநொச்சி, ஓக. 6

கிளி. முக்கொம்பன் மகா வித்தியாலயத்தின் 17 வயதுப் பிரிவு ஆண்கள் அணி, கைப்பந்து போட்டியில் மாகாண மட்டத்தில் 2 ஆம் இடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இதேவேளை இப்பாடசாலையின் 20 வயதுப் பிரிவு ஆண்கள் அணியும் மாகாண மட்ட கைப்பந்துப் போட்டியில் 2 ஆம் இடம் பெற்று தேசிய மட்டப் போட்டிக்கு இரண்டாவது தடவையாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது. (ப-13)

பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்துக்குட்பட்ட தினேஷ் முன்பள்ளி மற்றும் வளர்பிறை முன்பள்ளி, உதயதாரகை முன்பள்ளி மற்றும் அறத்தி நகர் முன்பள்ளி என நான்கு முன்பள்ளிகள் இணைந்து ஏற்பாடு செய்த, செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு விழா, கச்சார்வெளி செல்வபுரம் தினேஷ் முன்பள்ளி விளையாட்டு மைதானத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பற்றது. (ப-113,27)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரணில் அரசாங்கத்தின்

# பெரும்பான்மைப் பலத்தை சோதிக்கவுள்ள எதிர்க்கட்சி

**கொழும்பு, ஓக.6**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், ராஜபக்சக்களுக்கும் இடையிலான அரசியல் உறவு முறிந்துள்ள நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளதா என்பதை எதிரணிகள் இன்று பரீசிலித்து பார்க்கக்கூடும் எனத் தெரியவருகின்றது.**

நாடாளுமன்றம் இன்று முற்பகல் 9.30 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது.

தனி ஒருவராக நாடாளுமன்றம் வந்த ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகி இருந்தாலும் ஆட்சியை முன்னெடுப்பதற்குரிய ஒத்துழைப்பை நாடாளுமன்றத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியே வழங்கி வந்தது. எனினும், மொட்டுக் கட்சி தற்போது பிளவுபட்டுள்ளது. அந்தக் கட்சியின் 80 வரையான நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி ரணில் பக்கம் உள்ளனர் என்று ஐக்கிய தேசியக் கட்சி கூறுகின்றது. ஆனால் பெரும்பாலான நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமது பக்கமே உள்ளனர் என்று ராஜபக்ச தரப்பு கூறுகின்றது.

எது எப்படி இருந்தாலும் சில சட்ட வரைவுகளை சபையில் நிறைவேற்றிக்கொள்வதற்கு நாடாளுமன்றத்தில் சாதாரண பெரும்பான்மை (113) தேவை. அதனால் ஜனாதிபதி ரணிலுக்குரிய நாடாளுமன்றப் பெரும்பான்மைப் பலத்தை பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி இன்று பரிசீலித்து பார்க்கக்கூடும் அல்லது அது தொடர்பில் விளக்கம் கோரக்கூடும் எனத் தெரியவருகின்றது. (எ-44)

## ஹஷான் திலகரத்னவும் ஐ.ம.சக்தியின் பக்கம்

கொழும்பு, ஓக.6

இலங்கைக் கிரிக்கெட் அணியின் சிரேஷ்ட வீரர்களில் ஒருவரும், பங்களாதேஷ் கிரிக்கெட் மகளிர் அணியின் பயிற்றுவிப்பாளருமான ஹஷான் திலகரத்ன எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வுக்கு ஆதரவளிக்கும் வகையில் நேற்றுத் திங்கட்கிழமை ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டார்.

இதவேளை அவரது பாரியாரும், இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியின் ஏற்பாட்டாளராகக் கடமையாற்றி வரும் திருமதி அப்சாரி சிங்கபாகு திலகரத்னவும் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைந்து கொண்டனர். (எ-25)

# சமூக வலைத்தள தகவல் முற்றிலும் போலியானது!

*தேர்தல்கள் ஆணைக்குழு எச்சரிக்கை*

ஜனாதிபதித் தேர்தலில் வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் நாட்டில் உள்ள எந்தவொரு தேர்தல் வாக்கெடுப்பு நிலையத்திலும் வாக்களிக்க முடியும் என சமூக ஊடகங்களில் பரவும் தகவல்கள் போலியானவை எனத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யப்பட்டுள்ள வாக்காளர்கள் தங்களது மாவட்டத்துக்குரிய தேர்தல் வாக்கெடுப்பு நிலையத்துக்குச் செல்வதன் மூலமும், தபால் மூலம் வாக்களிக்கவுள்ளோர் தங்களது மாவட்டத் தெரிவத்தாட்சி அலுவலரின் முன்னிலையில் வாக்களிப்பதன் மூலமும் தேர்தல் சட்டத்தின்படி வாக்களிக்கமுடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் உத்தியோகபூர்வ வெளியீடு இன்றி சமூக ஊடகங்களில் பகிரப்படும் தகவல்கள் அனைத்தும் போலியானவை எனத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (எ-இ)



## தாய் சொல்லை தட்டாத ரோஹித

கொழும்பு, ஓக.6

தாய் கூறியதன் காரணமாகவே எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில், ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க முடிவெடுத்தேன் என்று மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதித் தேர்தலில் ஆதரிப்பதில்லை என தீர்மானம் எடுக்கப்பட்ட கூட்டத்தில் பங்கேற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்த்தன தற்போது ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளார். களுத்துறையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு பேசிய அவர் தனது முடிவுக்கான காரணத்தையும் வெளிப்படுத்தியுள்ளார். என் அம்மாவுக்கு 87 வயது. மகனே, மிஸ்டர் மஹிந்தவை விட்டுவிட்டு வீட்டுக்கு வராதே என்று 2015ஆம் ஆண்டு அவர் சொல்லியிருந்தார். ஆனால் இந்த முறை, மகனே, போய் ரணிலை ஜனாதிபதியாக வெற்றிபெறச் செய்வதற்கான வேலையைச் செய்யுங்கள் என்று கூறினார். அதனால்தான் இந்த முடிவை எடுத்தேன் என்று அவர் கூறியுள்ளார். (எ-இ)

# ரணில் அரசாங்கத்துக்கு பெரும்பான்மை உள்ளது

*பிரசன்ன ரணதுங்க நம்பிக்கை*

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்துக்கு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் உள்ளது. அதனால் அடுத்த இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு அரசை நடத்துவதில் சிக்கல் இருக்காது என ஆளுங்கட்சி பிரதம கொறடாவும், அமைச்சருமான பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

மொட்டுக் கட்சி சரியான முடிவை எடுக்காவிட்டால், அந்தக் கட்சியில் ஓரிரு உறுப்பினர்களே எஞ்சுவார்கள். ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் என்ற வகையில் நான் கடந்த இரண்டரை வருடங்களில் அந்தச் சவாலை எதிர்கொண்டேன். எங்களுக்கு 113 நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேவை. எஞ்சிய இரண்டு அல்லது மூன்று மாதங்களில் நாம் இந்தப் பயணத்தை மேற்கொள்ளமுடியும். எங்களுக்கு நாடாளுமன்றத்தில் தனிப் பெரும்பான்மை உள்ளது என்றார். (எ-44)

# தினம் தெரியுமோ?

**எ**ள்ளோட சேர்ந்து எலிப்புழுக்கையும் காய்ஞ்ச கணக்கா, ஒராளின்ர சொந்த லாபத்துக்காக மூண்டு வருத்தக்காரர் ஆஸ்பத்திரிலை அரைநாளுக்கும் மேல ஆத்துலைஞ்ச கதை கேள்விப்பட்டிருக்கிறியளோ? கேள்விப்படாட்டி ஒருக்கா மந்திகை ஆஸ்பத்திரிப்பக்கம் எட்டிப்பாத்தியள் எண்டா வடிவா அறிஞ்சு கொள்ளலாம்.

போன வெள்ளிக்கிழமை அந்த ஆஸ்பத்திரியில ட்ரீட்மெண்ட் எடுத்துக்கொண்டிருந்த நாலு வருத்தக்காரரை உடனடியா பெரியாஸ்பத்திரிக்கு மாத்தச் சொல்லி டொக்டர்மார் சொல்லியிருக்கினம். மந்திகையில இருந்து பெரியாஸ்பத்திரிக்கு வருத்தக்காரரை அங்க உள்ள அம்புலன்ஸிலதான் கொண்டு போகோணும். அதுக்காக நாலு வருத்தக்காரரையும், அவையவை இருந்த வார்ட்டில இருந்து 'வீல் செயாரில' (சக்கர நாற்காலியில) சிற்றூழியர்மார் தள்ளிக்கொண்டு அம்புலன்ஸ் நிக்கிற இடத்துக்கு கொண்டந்திருக்கினம். அந்த நாலு வருத்தக்காரரில் ஒருத்தருக்கு இதயப் பாதிப்பு.அதால அவரை முதல்ல ஏத்திப்போட்டு, மற்றவையும் ஏறி இருந்திருக்கினம். ஆனால் கொஞ்ச நேரத்தில இதய வருத்தக்காரரை தவிர மிச்ச மூண்டு பேரையும் அம்புலன்ஸூல இருந்து இறங்கச் சொல்லி இருக்கினம். ஒரு இளம் பிள்ளை மருந்து குடிச்சு சீரியஸா இருக்கு. அவாவை இப்பவே பெரியாஸ்பத்திரியில சேர்க்கோணும். அதால நீங்கள் இறங்குங்கோ, மருந்து குடிச்ச பிள்ளையையும், ஹார்ட் வருத்தக்காரரையும் இந்த அம்புலன்ஸில கொண்டு போறம். இன்னொரு அம்புலன்ஸ் இப்பவரும். அதில நீங்கள் ஏறிவரலாம் 'எண்டிட்டு அந்த அம்புலன்ஸ் றைவர் வெளிக்கிட்டிட்டார். அந்த அம்புலன்ஸ் போன கொஞ்சநேரத்திலையே மற்ற அம்புலன்ஸூம் வந்திட்டு. ஆனால் மிச்சமா நிண்ட மூண்டு வருத்தக்காரரையும் அதில ஏத்துறமாதிரி தெரியேலை.

கடைசியில, 4 மணிபோலதான் அம்புலன்ஸ் வெளிக்கிடும் எண்டு அதுக்குப் பொறுப்பா நிண்ட ஒராள் சொன்னதால எந்த 'வீல் செயாரில' வருத்தக்காரரை கொண்டந்தினமோ அதிலையே கொண்டுபோய் பத்திரமா பழையபடி வார்ட்டிலையே சிற்றூழியர்மார் விட்டிருக்கினம். மத்தியானத்தில இருந்து அதுவரைக்கும் சிற்றூழியர்மார்தான் கால்கடுக்க 'வீல்செயாரோட' நிண்டவை. இப்ப அம்புலன்ஸ் நாலுமணிக்குத்தான் எண்டுசொல்ல, அவைக்கு கோபம் வந்தாலும் வெளியில காட்டாமல் வாய்க்குள்ள மட்டும் புறுபுறுத்துக் கொண்டு போட்டினம். பிறகு திரும்ப அந்த வருத்தக்காரரை அம்புலன்ஸ் நிக்கிற இடத்துக்கு கூட்டியாங்கோ எண்டு ஓர்டர் வர, அப்பதான் போய் கொஞ்சம் ஆறுதலா இருப்பம் எண்டு நினைச்ச சிற்றூழியர்மார் அவசர அவசரமா மூண்டு வருத்தக்காரரையும் திரும்ப 'வீல் செயாரில' கூட்டிக்கொண்டு வந்திச்சினம். பின்னேரம் 3. 30 மணிக்கே அவையை அம்புலன்ஸூல ஏத்தின பிறகும் அது வெளிக்கிடாமல் அப்பிடியே அசையாமல் நிண்டிருக்கு. எப்ப அம்புலன்ஸ் வெளிக்கிடும் எண்டது தெரியாமல் அரைமணித்தியாலத்துக்கு மேல வெயிட் பண்ணிக்களைச்சுப்போய் 'எப்ப வெளிக்கிடுவியள்?' எண்டு றைவரைக் கேட்டிருக்கினம். அதுக்கு றைவர் 'அங்க வாறவாவை கேளுங்கோ' எண்டு ஒராளைக் காட்டியிருக்கிறார். அவாதான் அம்புலன்ஸ் போய் வாறதுக்குப் பொறுப்பா இருக்கிற சிற்றூழியராம். மந்திகையில இருந்து பெரியாஸ்பத்திரிக்கு போற வழியில தான் அவான்ர வீடு இருக்கு. அதால, வேலை முடிஞ்சு அம்புலன்ஸில போய் தான் இறங்கிறதுக்கு வசதியாத்தான் இப்பிடி நாலுமணி மட்டும் அம்புலன்ஸில வருத்தக்காரரை ஏத்தி அனுப்பாமல் இழுத்தடிச்சவவாம். இப்ப எள்ளு ஆர், எலிப்புழுக்கை ஆர் எண்டு விளங்கியிருக்கும். இப்பிடி ஒவ்வொருத்தரும் தங்கட வசதிக்காக வருத்தக்காரரைப் போட்டு வாட்டுறது நியாயமோ?

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முல்லைத்தீவு, துணுக்காய் வலயப் பாட சாலைகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகள் துணுக்காய் வலய பிரதிக் கல்வி பணிப்பாளர் திருமதி பத்மசொருபன் பிராந் தகி தலைமையில் ஒட்டுசுட்டான் மகா வித்தி யாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை நடை பெற்றன. நிகழ்வில் துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி மாலதி முகுந் தன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண் டார். 1ஆம் இடத்தை முத்தையன்கட்டு இடது கரை அ. த. க. பாடசாலையும், 2 ஆம் இடத்தை பாலிநகர் மகா வித்தியாலயமும், 3 ஆம்இடத்தை ஒட்டுசுட்டான்மகா வித்தியா லயமும்பெற்றுக்கொண்டன. (எ-25,13)





தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் ஏற்பாட்டில், தமிழ்மக்களின் உரிமைகளுக்காகத் தொடர்ச்சியா கக் குரல் கொடுத்து வந்த மறைந்த நவசமசமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்ரமபாகு கருணா ரட்னவுக்கான நினைவேந்தல் நிகழ்வு பசுமை இயக்கத்தின் தலைவர் பொன்னுத்துரை ஐங்கரநே சன் தலைமையில் திருநெல்வேலியில் அமைந் துள்ள பிறைற் இன் மண்டபத்தில் நேற்றுமுன்தி னம் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. (எ-25,66)




## இதழ் வெளியீடு

யாழ்ப்பாணம், ஓக.6

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவையினரின் ஏற்பாட்டில் ஞானச்சுடர் சஞ்சி கையின் ஆடி மாத 319 ஆவது இதழ் வெளியீட்டு நிகழ்வு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண் பாட்டுப் பேரவையின் தலைவரும், ஓய்வுநிலை அதிபருமான ஆ.சிவநாதன் தலைமையில் ஆச் சிரம மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீடத்தின் விரிவுரையாளர் தயாளினி குமாரசாமி மலரின் வெளியீட்டுரையையும், ஆசி ரியர் திருமதி சசிலேகா ஜெயராஜன் மலரின் மதிப் பீட்டுரையையும் ஆற்றினர். (ஒ-27-25- 66)



புலோலி வடமேற்கு முருகன் கோவிலடி அறிவ கம் சன சமூக நிலையத்தின் 69 ஆவது ஆண்டு விழா, நிலையத்தின் தலைவர் பிரபாகரன் சரனு சன், தலைமையில் நேற்றுமுன்தினம் ஞாயிற் றுக்கிழமை இடம்பெற்றது. (எ-25,27)



## மதிப்பளிப்பு

கிளிநொச்சி, ஓக.6

ஈழத்து கலை இலக்கியத்துறையில் ஐந்து தசாப்தங்களைத் தாண்டிப் பயணிக்கும் வன்னியின் ஆளுமையான கலாநிதி தமிழ் மணி அகளங்கனின் அர்ப்பணிப்பான தமிழ்ச் சேவையைப் பாராட்டி அடங்காப்பற் றுத் தமிழ்ச் சங்கத்தினரால் 'ஈழத்தமிழ் முதுசம்' எனும் விருது வழங்கி மதிப்பளிக் கப்பட்டுள்ளார். (ஒ-25-13)





வடமராட்சி தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தின் மஹோற்சவப் பெருவிழா நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத் துடன் ஆரம்பமானது. தொடர்ந்து முருகப்பெருமான் சிறிய மஞ்சத்தில் அடியவர்கள் சூழ உள்வீதி, வெளி வீதி உலா வந்தார். (எ-25,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.சுழிபுரம் வடக்கு ஆறுமுக வித்தியாலயத்தின் 114ஆவது நிறுவுநர் தினம், அதிபர்கள் தினம், நுழைவாயில் வளைவு திறப்பு விழா மற்றும் வருடாந்த பரிசளிப்பு விழா என்பன கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்றன. (ரி-125)




தேசிய ரீதியாக உள்ளூராட்சி மன்றங்களில் நடைபெற்ற செயற்றிறன் மதிப்பீடு 2024 இல் வலி வடக்கு பிரதேசசபை 663,75 புள்ளிகளுடன் தேசிய ரீதியாக இரண்டாம் இடம் பெற்று வெள்ளி விருதை தனதாக்கியுள்ளது.

அத்துடன் வேறுபட்ட நான்கு விடயங்களில் உயர் செயற்றிறனுக்காக மூன்று விருதுகளையும் பெற்றுக்கொண்டுள்ளது. இந்த விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன முன்னிலையில் அண்மையில் நடைபெற்றது. (ச)




மாகாணமட்ட கரம் போட்டியில், யாழ்.சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரியின் 17 வயதுப் பிரிவு ஆண்கள் அணி மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது. (ப-63)




# செயலமர்வு

யாழ்ப்பாணம், ஓக.6

சண்டிலிப்பாய் பிரதேச கலாசாரப் பிரிவின் ஏற்பாட்டில் தியானம், சிரிப்பு யோகா, உளஆரோக்கியம், திறன் விருத்தி விளையாட்டுகள், பற் சுகாதாரம், நேரிய சிந்தனையை வளர்த்தல் முதலான விடயங்களை உள்ளடக்கிய மாணவர்களுக்கான விழிப்புணர்வுச் செயலமர்வு கட்டுடை சைவ வித்தியாசாலையில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

செயலமர்வில் யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடத் தொற்றுநோயியல் மையம் மற்றும் குடும்பநலச் சுகாதார நிலைய வளவாளர்கள் பங்கு பற்றினர். (ஒ-25,66)



# விழிப்புணர்வுக் கருத்தரங்கு

உசன் இராமநாதன் மகா வித்தியாலய மாணவர்களுக்கு, வீதிப் போக்குவரத்து தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு, பாடசாலை அதிபர் தலைமையில் கடந்த புதன்கிழமை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

வீதிப் போக்குவரத்தின்போது, பின்பற்றவேண்டிய வீதி ஒழுங்கு விதிகள் பற்றியும் விதிமுறைகள் மற்றும் வீதிப் போக்குவரத்துச் சட்டத்தை மீறுவோருக்கு எதிராக பொலிஸாரால் வழங்கப்படும் அபராதங்கள் தொடர்பாகவும் நீதிமன்றத்தால் வழங்கப்படும் தண்டனைகள் தொடர்பாகவும் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவின் பொறுப்பதிகாரி தர்மரத்தினம் விழிப்புணர்வு வழங்கினார். (ப-159)



கிராமிய மட்டத்தில் சிறுவர்களின் பாதுகாப்பை மேம்படுத்துவதற்கான தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் நாடளாவிய நிகழ்ச்சித் திட்ட நிகழ்வு, சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலாளர் திருமதி சுபாஜினி மதியழகன் தலைமையில் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. (ப-66)

கடந்த புதன்கிழமை இடம்பெற்ற கிளிநொச்சி தெற்கு வலய தமிழ்மொழி கலைத்திறன் போட்டியில், கிளிநொச்சி, முக்கொம்பன் மகா வித்தியாலய மாணவர்கள், இலக்கிய நாடகத்தில் முதலாம் இடத்தைப் பெற்று மாகாண மட்டப் போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ப-13)





கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் தேசிய சமாதானப் பேரவையின் 'நிலைமாற்றத்துக்கான நீதி' செயலமர்வு கடந்த வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்ட பதில் மாவட்டச் செயலர் எஸ்.முரளிதரன் தலைமையில், மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. செயலமர்வில் தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா இணைய வழி செயலி ஊடாகக் கலந்து கொண்டு தெளிவூட்டல்களை வழங்கினார். (ச-113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பொதுவேட்பாளர்: ரெலோவுக்குள் குத்துவெட்டு

தமிழ்ப் பொதுவேட்பாளருக்கு ரெலோ ஆதரவு வழங்கினாலும் தான் ஆதரிக்கப்போவதில்லை என்றும் வன்னி மக்களின் மனங்களை அறிந்தே இந்த முடிவு எடுக்கப்படும் எனவும் தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ) வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ரெலோ பொது வேட்பாளரை ஆதரிக்கின்றது. ஆனால் அதற்கு நான் உடன்பாடில்லை. அது ஒரு விஷப் பரீட்சை. நான் வன்னி மக்களின் கருத்துகளை கேட்டறிந்துள்ளேன். அவர்களது நிலைப்பாடுதான் எனது நிலைப்பாடும். பொது வேட்பாளருக்கு வன்னியில் ஆதரவு இல்லை.

பொதுவேட்பாளர் என்ற ஒன்று வெல்லப்போவதில்லை. சமஷ்டி உள்ளிட்ட தமிழ் மக்களின் அபிலாஷைகளை முன்னிறுத்தி பொது வேட்பாளரை நிறுத்துகிறார்கள். ஆனால் அவர் குறைந்த வாக்குகளைப் பெறுகின்றபோது மக்களது அபிலாஷைகளுக்கு தமிழ் மக்களது அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற ஒரு தோற்றப்பாடு ஏற்படும்.

என்னைப் பொறுத்தவரை தமிழரசுக் கட்சி, தமிழ் தேசிய மக்கள் முன்னனி போன்ற தமிழ்த் தேசியக் கட்சிகளும் இந்தக் கூட்டணியுடன் இணைந்து அனைத்து தமிழ்த் தேசியக் கட்சிகளும் பொது வேட்பாளரை நிறுத்திச் செயற்பட்டால் அதற்கு எனது ஆதரவு உண்டு. அப்போதுதான் மக்கள் அதனை ஆதரிப்பார்கள். ஆனால் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி பகிஷ்கரிக்கிறது. தமிழரசுக் கட்சி பொது வேட்பாளருக்கு ஆதரவு இல்லை. இதனால் தமிழ் வாக்கு சிதறும். சொற்பவாக்குகளையே பொது வேட்பாளர் பெறுவார். இது பாதிப்பை ஏற்படுத்தும்.பொது வேட்பாளர் தெரிவில் 7 கட்சிகளும் 7 பொது அமைப்புகளும் இருக்கிறது. ஆனால் அந்தக் கட்சிகளிடமோ அல்லது அந்த அமைப்புகளிடமோ பொது வேட்பாளராகநியமிப்பதற்கு ஆட்கள் இல்லை. பொது வேட்பாளருக்கு ஆதரவு வழங்காத தமிழரசுக் கட்சியின் மத்தியகுழு உறுப்பினர்களான சட்டத்தரணி கே.வி. தவராசா மற்றும் அக் கட்சியின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் பா.அரிய நேந்திரன் ஆகியோரில் ஒருவரது பெயரை பரிசீலிக்கிறார்கள். அவர்களிடம் வேட்பாளர் இல்லாது பொது வேட்பாளரை எதிர்க்கும் கட்சியிடம் வேட்பாளரைத் தேடும் நிலை என்றால் சிந்திக்கவேண்டும் - என்றார். (ஒ-110)


## தேவை

முழுநேர வீடியோ எடிட்டர் தேவை. டிக்டொக் வீடியோ உருவாக்குபவர்கள் தேவை.

075 777 7887

(Cs/55871) N-1

## உடனடி வேலைவாய்ப்பு

யாழ்ப்பாண நகரில் உள்ள பிரபல்யமான புத்தகசாலைக்கு விற்பனை உதவியாளர் தேவை.

உடனடியாகத் தொடர்புகொள்ளவும்.

077 663 9304

(Cs/55866) N-1

## பெயர்மாற்றம்

முதலாம் வட்டாரம் புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவில் வசிக்கும் **குலராசா தேவி** ஆகிய நான் எனது பெயரை **குலராசா தேவிகா** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **குலராசா தேவிகா** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

குலராசா தேவிகா

(Cs/55870) N-1

## பெண் பராமரிப்பாளர் தேவை

ஊரிக்காடு வல்வெட்டித்துறையில் இயங்கிவருகின்ற வல்வை முதியோர் இல்லத்திற்கு பெண் பராமரிப்பாளர் தேவை.

உணவு தங்குமிடவசதி இலவசம்.

தகுந்த சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.

எமது இல்லத்தில் புதிதாக ஆண் (முதியவர்கள்) இணைய விரும்புவோர் இணைந்து கொள்ளலாம்.

கட்டணம் குறைவான நிலையில் அறவிடப்படும்.

தொடர்புகளுக்கு: 077 810 6857
077 154 2067
021 226 5551

## கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலக சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்


**திருமதி**
**வாகீசன் தமிழினி**

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மலர்வு 22.06.1992
உதிர்வு 03.08.2024

பிரதேச செயலாளரும்,
உத்தியோகத்தர்களும்,
ஊழியர் நலன்புரி சங்கம்,
பிரதேச செயலகம், யாழ்ப்பாணம்

## மரண அறிவித்தல்



### வீரசிங்கம் சடாச்சரம்

இல.48/5, 1 ஆம் ஒழுங்கை (கிடாய் விழுந்தான்) பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், இல.149/16, மோதரை வீதி, கொழும்பு - 15 ஐ வதிவிடமாகவும் கொண்ட வீரசிங்கம் சடாச்சரம் நேற்றுமுன்தினம் (04.08.2024) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - நவரட்ணமணி தம்பதியரின் செல்வப் புதல்வனும், காலஞ்சென்ற அரியரெட்ணம் மற்றும் நாகேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும், சிவகாந்தா அவர்களின் அன்புக் கணவரும், ஷாருஜன், ஷாருலேகா, விஷ்ணுலேகா ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான நாகலோகதேவி, கமலநாதன் மற்றும் ராஜேஸ்வரி, பத்மசோதி, இராசலிங்கம், சண்முகலிங்கம், சதாநந்தராஜா ஆகியோரின் பாசமிகு சகோதரரும், சந்திரகாந்தா, காலஞ்சென்ற ஜெயகாந்தா மற்றும் தேவகாந்தன், லக்ஷிகாந்தா, காலஞ்சென்ற சிவகுருநாதன் மற்றும் அம்பிகாமலர், பிரபுசிகாமணி, விஜயலக்ஷிமி, ஜீவராணி, சிவாஜினி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், கலைவாணனின் சகலனும், சர்மாவின் உடன் பிறவா சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (07.08.2024) புதன்கிழமை கொழும்பு பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மறுநாள் (08.08.2024) வியாழக்கிழமை கிரியைகள் நடைபெற்று, தகனத்திற்காக பிற்பகல் 3.30 மணியளவில் பொரளை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


தொடர்பு: 077 961 4768

தகவல்:
குடும்பத்தினர்.

(CS/55874) N-1

## 31ஆம் நாள் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்

தோற்றம்
22 . 02 . 1953



மறைவு
05 . 07 . 2024

கடந்த 05.07.2024 அன்று இறைவனடி சேர்ந்த

### கதிரிப்பிள்ளை இரத்தினம் (தம்பித்துரை)

அவர்களின் மறைவுத் துயரில் பங்கெடுத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பி ஆறுதல் கூறிய அனைவருக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரின் வீட்டுக் கிருத்திய நிகழ்வு இன்று (06.08.2024) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*


தமிழகம் வீதி,
குரும்பசிட்டி கிழக்கு,
தெல்லிப்பளை.


குடும்பத்தினர்.
076 323 7811

(CS 55878) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# பங்களாதேஷ் நாடாளுமன்றம் சூறை: எம்.பி.க்களுடைய வீடுகள் தீக்கிரை!

## உச்சக்கட்டப் பாதுகாப்புக் குலைவு


டாக்கா, ஓக. 6


பங்களாதேஷ் நாடாளுமன்றம், பிரதமர் ஷேக் ஹசீனாவின் இல்லம் மற்றும் அலுவலகம் என்பன கலவரக்காரர்களால் நேற்று நள்ளிரவு சூறையாடப்பட்டுள்ளன.

கலவரங்களின் எதிரொலியாக பிரதமர் ஷேக் ஹசீனா பதவியிலிருந்து விலகி, இந்தியாவுக்குத் தப்பித்தோடி அங்கு அரசியல் தஞ்சமடைந்துள்ளார். அங்கிருந்து அவர் பிரிட்டனுக்குச் சென்று அங்கு அரசியல் தஞ்சம் கோர முடிவு செய்துள்ளார்.

ஷேக் ஹசீனா பதவியைத் துறந்து நாட்டைவிட்டு வெளியேறிய போதிலும், கலவரங்கள் முற்றுப்பெற்றபாடில்லை.







நேற்று இரவிரவாக ஆர்ப்பாட்டக்காரர்கள் நாட்டின் அதி பாதுகாப்பான பகுதிகளுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த பொருள்களைச் சூறையாடினார்கள். நாடாளுமன்றம், பிரதமர் ஷேக் ஹசீனாவின் அலுவலகம், பிரதமரின் இல்லம் என்பன கலவரக்காரர்களால் சூறையாடப்பட்டன.

அத்துடன், பங்களாதேஷ் நாடாளுமன்ற உறுப்பினர்களின் வீடுகளும் கலவரக்காரர்களால் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. நாட்டின் பாதுகாப்பு நிலைமை கைமீறிச் சென்றுள்ளதையடுத்து, பங்களாதேஷ் இராணுவத் தலைமையகத்துக்கு முன்னெப்போதும் இல்லாத வகையில் பலத்த பாதுகாப்புப் போடப்பட்டுள்ளது. அத்துடன், பாதுகாப்புக் காரணங்களுக்காக டாக்கா விமான நிலையம் மூடப்பட்டுள்ளது.

போராட்டக்காரர்களின் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்றும், ஆதலால் அமைதியைக் கடைப்பிடித்து நாடு இயல்பு நிலைக்குத் திரும்புவதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும் போராட்டக்காரர்களை இராணுவம் கோரியுள்ளது. (ம)

# தேர்தல் தொடர்பில் 60 முறைப்பாடுகள்

கொழும்பு, ஓக. 6



ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் சுமார் 60 முறைப்பாடுகள் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ளன. இவற்றில் அநேகமானவை, அரச அதிகாரம் மற்றும் அரச சொத்துகளை துஷ்பிரயோகம் செய்து வருகின்றமை தொடர்பானவையாகும் என பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹன ஹெட்டியாரச்சி தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டது முதல் இதுவரை கிடைக்கப்பெற்றுள்ள தேர்தல் சட்ட மீறல் தொடர்பான முறைப்பாடுகள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார். (ஒ.இ)

# தாளையடியைத் தனியாக்க வேண்டாம்: மக்கள் இணைந்து நேற்றுப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஓக. 6

தாளையடிக் கிராமத்தை தனியான கிராம அலுவலர் பிரிவாக மாற்ற எதிர்ப்புத் தெரிவித்து மருதங்கேணியில் நேற்று மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலர் பிரிவில் மருதங்கேணிப் பிரதேசத்தில் மருதங்கேணி வடக்கு, மருதங்கேணி தெற்கு, தாளையடி ஆகிய மூன்று கிராமங்கள் அமைந்துள்ளன. இந்தநிலையில் சுமார் 140 குடும்பங்களைக் கொண்ட தாளையடிக் கிராமத்தை தனியான கிராம சேவகர் பிரிவாக மாற்றுவதற்குரிய நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்தத் தன்னிச்சையான செயற்பாட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்தும், இந்த நடவடிக்கையை உடனடியாகக் கைவிடுமாறு கோரியுமே மருதங்கேணி வடக்கு மற்றும் மருதங்கேணி தெற்குக் கிராமங்களைச் சேர்ந்த மக்கள் நேற்றுத் திங்கட்கிழமை காலை 9.30 மணியளவில் மருதங்கேணிப் பிரதேச செயலத்துக்கு முன்பாகக் கவனயீர்ப்புப் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். (ம-66)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், ஓக. 6




ஆடி அமாவாசை தினம் அன்று வழக்கம்பரை அம்மன் அறக்கட்டளை, பொன்னாலை நாராயணன் அறக்கட்டளை மற்றும் விக்ரோரியா ஆன்மீக அறக்கட்டளையின் அறங்காவலர்கள் இணைந்து 2 மாணவர்களுக்கான கல்விக்கான நிதி உதவி, 20 ஏழை குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகள் மற்றும் 2 பெண் தலைமைக் குடும்பங்களின் வாழ்வாதாரத்துக்கு உதவும் வகையில் கோழிகள் உள்ளிட்ட கூண்டுகளுடன் கோழிகளுக்கான உணவுக்கான ஒரு தொகைப் பணம் என்பன வழங்கப்பட்டன.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் ஈஸ்வரன், அமெரிக்காவில் வசிக்கும் குமரேசு ஜெகநாதன் ஆகியோர் தத்தமது தந்தையரின் நினைவாக இந்த உதவிகளை வழங்கினர். (ஓ-27)

# வடக்கு - கிழக்கில் மழைக்கு வாய்ப்பு

யாழ்ப்பாணம், ஓக. 6

வெப்பச் சலனம் மற்றும் காற்று வேக மாறுபாடு காரணமாக எதிர்வரும் 14ஆம் திகதி வரை வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களின் பல பகுதிகளுக்கும் மிதமானது முதல் கனமானது வரை மழை கிடைக்கும் வாய்ப்புள்ளதாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல்துறையின் தலைவரும், வானிலையாளருமான நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக நேற்றுத் திங்கட்கிழமை அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, உள் நிலப்பகுதிகளில் கனமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஏனைய பகுதிகளுடன் ஒப்பிடும் போது முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மற்றும் திருகோணமலை மாவட்டங்கள் சற்றுக் கனமான மழையைப் பெறும் வாய்ப்புள்ளது.


எனவே, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் நெல் மற்றும் சிறுதானிய பயிர்களை அறுவடை செய்பவர்கள் மழை தொடர்பில் அவதானமாக இருப்பது அவசியம். மேலும் வெப்பச் சலனச் செயற்பாடு காரணமாக இந்த மழை கிடைக்கும் என்பதனால் இடி மின்னல் தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியம் - என்றார். (ஓ-66)

## கச்சா எண்ணெய் விலை வீழ்ச்சி!

தெஹ்ரோன், ஓக. 6

மத்திய கிழக்கில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ள நிலையில் உலக சந்தையில் கச்சா எண்ணெயின் விலை இன்று குறைந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. (ம)

## சீனா முதலிடம்



பரிஸ், ஓக. 6

பரிஸ் ஒலிம்பிக் பதக்கப் பட்டியலில், இன்றைய நாள் முடிவிலும் சீனாவே முதலிடத்தில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றது. இரண்டாவது இடத்தில் அமெரிக்காவும், மூன்றாம் இடத்தில் அவுஸ்திரேலியாவும் உள்ளன. (ம)

## சட்டவிரோத மீன்பிடி: 27 ஆயிரம் டொலர் தண்டம்

கொழும்பு, ஓக. 6

சீஷெல்ஸில் சட்டவிரோத மீன்பிடியில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட இலங்கையர் ஒருவருக்கு அந்த நாட்டு உயர் நீதிமன்றம் 27 ஆயிரம் அமெரிக்க டொலர் தண்டம் விதித்துள்ளது.

ஜூன் 9ஆம் திகதி சீஷெல்ஸ் கடற்கரையிலிருந்து 94 கடல்மைல் தூரத்தில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த 58 வயதான பத்மசிறி என்பவருக்கும் அவரது உதவியாளரான 16 வயது சம்பத் என்பவருக்கும் எதிராகவே இந்த தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

ஜூலை 29ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது சம்பந்தப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து குறைந்த பட்ச தண்டனையாக 27 ஆயிரம் அமெரிக்க டொலர் தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாக நீதிபதி பிரசெல் அடிலெயின் தெரிவித்துள்ளார். பிடிக்கப்பட்ட சுறாக்கள் யாவும் சீஷெல்ஸின் சொத்து எனவும் நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளார். (ஓ-6)


## மரண அறிவித்தல்

தோற்றம் 03 . 06 . 1946



மறைவு 05 . 08 . 2024

### திருமதி தர்மரட்ணம் குணமணிதேவி

மேலைப்புலம் அளவெட்டி தெற்கை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்மரட்ணம் குணமணிதேவி அவர்கள் நேற்று (05.08.2024) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் - பொன்னம்மா தம்பதியரின் அன்புப் புதல்வியும், காலஞ்சென்ற தம்பையா - சுந்தரம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், தம்பையா தர்மரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், திருமதி ச.கோபிகீதா (மக்கள் வங்கி - சங்கானை) அவர்களின் அன்புத் தாயாரும், திரு.ச.ஞ்சயனி அவர்களின் அன்பு மாமியாரும், ச.ஆதூரனின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான வீ. கந்தசாமி, பா.நவமணிதேவி மற்றும் வீ.கருணாகரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தியாகேஸ்வரி (திலகம்), தங்கராசா (தவம்), காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், இளையபிள்ளை மற்றும் விமலாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (06.08.2024) செவ்வாய்க்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.


T.P: 077 944 2936
077 121 5017

தகவல்:
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்

பிறப்பு 19 . 12 . 1937



இறப்பு 05 . 08 . 2024

### விஸ்வலிங்கம் தங்கலிங்கம்

வேலணை 3ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விஸ்வலிங்கம் தங்கலிங்கம் (RASA) நேற்று (05.08.2024) திங்கட்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற விஸ்வலிங்கம் - மனோன்மணி (செல்லம்) தம்பதியரின் அன்பு மகனும், அமரர் முத்துலிங்கம், அமரர் கைலாயபிள்ளை, அமரர் சிவம், செல்வம் ஆகியோரின் சகோதரரும், அனுஷாம்மாவின் அன்புக் கணவரும், சிவகஜனி (பிரான்ஸ்), வர்ணசீலன் (அகிஷா நகையகம், யாழ்ப்பாணம்), சுகுமார், கவிதாஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ரவீந்திரன், குமுதினி, அர்ச்சனா ஆகியோரின் மாமனாரும், அபிலாஸ், ஆதனா, கிந்துஷா, நிருஷிகன், அகிஷா ஆகியோரின் பாட்டனாரும், அமரர் பாக்கியம், கமலாதேவி, தேவகி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (08.08.2024) அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் காலை 8.00 மணியளவில் தகனக் கிரியைக்காக சாட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வர்ணசீலன் (சீலன்)
075 271 7145
077 281 2341

தகவல்:
குடும்பத்தினர்

(CS 1063) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இஸ்ரேல் மீது விரைவில் ஈரான் தாக்குதல் நடத்தும்

## அமெரிக்கா வெளிப்படை எச்சரிக்கை

வொஷிங்டன், ஓக. 6


**இஸ்ரேல் மீது அடுத்த 48 மணிநேரத்துக்குள் ஈரான் தாக்குதல் நடத்தும் என்று அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அன்ரனி பிளிங்கன் எச்சரிக்கை விடுத்துள்ளார்.**

ஹமாஸ் அமைப்பின் அரசியல் பிரிவுத் தலைவரான இஸ்மாயில் ஹனியே, கொல்லப்பட்டதையடுத்து இஸ்ரேலுக்கு எதிராகப் பரந்துபட்ட தாக்குதலை நடத்துவதற்கு ஈரான் தயாராகி வருகின்றது. ஹிஸ்புல்லாவும் இஸ்ரேல் மீது தொடர்ச்சியான ஏவுகணைத் தாக்குதல்களை நடத்த வாய்ப்புகள் உள்ளதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, அடுத்த 48 மணிநேரத்துக்குள் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதலை நடத்தும் என்று அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்ளது.

அமெரிக்காவின் எச்சரிக்கையடுத்து, ஈரானின் தாக்குதல்களை எதிர்கொள்வது தொடர்பில் மொசாட் உள்ளிட்ட உளவுப் பிரிவுகளின் தலைவர்களுடனும், இஸ்ரேலின் இராணுவப் பிரதானிகளுடனும் பிரதமர் நெத்தன்யாகு கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார். அத்துடன், லெபனான் எல்லையை நோக்கி கூடுதலான துருப்புகளைக் குவிக்கும் நடவடிக்கைகளிலும் இஸ்ரேல் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றது.

இஸ்ரேல் - ஈரான் இடையே மத்தியஸ்தம் செய்யும் நடவடிக்கைகள் ஜி-7 கூட்டணியால் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அமெரிக்கத் தலையீட்டின் அடிப்படையில் மத்தியஸ்தத்துக்கான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. (ம)

# சீமானுக்கு எதிராக முறைப்பாடு



சென்னை, ஓக. 6

தமிழக முன்னாள் முதல்வர் கருணாநிதிக்கு எதிராகத் தொடர்ச்சியாக அவதூறு பரப்பி வருகின்றார் என்று தெரிவித்து, சீமானுக்கு எதிராக மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முறைப்பாடு வழங்கப்பட்டுள்ளது. (ம)

# இந்தியாவுடன் செயற்பட சம்மதித்துள்ளது நாஸா!

புதுடில்லி, ஓக. 6

பொக்ரோன் அணுகுண்டு சோதனையில் ஈடுபட்டமைக்காக இந்தியாவுக்குத் தடைவிதிக்கப்பட்ட 25 ஆண்டுகளுக்குப் பின்னர், விண்வெளித் திட்டத்தில் இஸ்ரோவுடன் இணைந்து செயற்பட நாஸா தயாராகியுள்ளது.

சர்வதேச விண்வெளி மையத்துக்கு ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் பல்கான்-9 றொக்கெட் மூலம் ட்ராகன் விண்கலத்தை அடுத்த ஆண்டு அனுப்புவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தை அமெரிக்காவில் உள்ள தனியார் விண்வெளி ஆய்வு நிறுவனமான ஆக்ஸிஓம் நிறுவனம் மேற்கொள்கிறது. இந்த விண்கலத்தில் அமெரிக்கா, போலந்து, ஹங்கேரி மற்றும் இந்தியாவைச் சேர்ந்த 4 விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி மையத்துக்குச் செல்லவுள்ளனர்.

1998ஆம் ஆண்டில் பொக்ரோன் அணுகுண்டு சோதனையை இந்தியா நடத்தியதால், இஸ்ரோவுக்கு தடைகள் விதிக்கப்பட்டன. இவ்வாறிருக்கையில் தற்போதைய திட்டத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் நேரடியாக இணைந்து செயற்படத் தயாராகியுள்ளமை பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது.

2008ஆம் ஆண்டு சந்திராயன் விண்கலத்தை இஸ்ரோ அனுப்பியபோது, நாஸாவின் உபகரணங்கள் சிலவும் விண்கலத்தில் இணைத்து அனுப்பப்பட்டன. இதற்காக இந்தியா கட்டணம் எதுவும் பெறவில்லை. இதன் பின்னர் நிலவில் நீர்மூலக்கூறுகள் உள்ளமையை அமெரிக்காவும் இந்தியாவும் கூட்டாகக் கண்டுபிடித்தன. இவற்றின் காரணமாகவே தற்போது இந்தியாவுடன் இணைந்து செயற்பட அமெரிக்கா சம்மதித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம)






# பிரிட்டனில் மிகவும் அவதானம் கனேடியர்களுக்கு எச்சரிக்கை!

லண்டன், ஓக. 6

பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொள்ளும் கனேடியர்கள் மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு கனேடிய வெளிவிவகார அமைச்சு பயண எச்சரிக்கைகளை விடுத்துள்ளது.

சவுத்போர்ட் நகரில் கடந்த திங்கட்கிழமை மூன்று சிறுமிகள் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, பிரிட்டனில் பரவலாகப் போராட்டங்கள் வெடித்துள்ளன. தீவிர வலதுசாரிகளால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இந்தப் போராட்டங்கள் நாளுக்குநாள் தீவிரம் பெற்று வருகின்றன. ஹல், லிவர்பூர், பிறிஸ்டல் பகுதிகளில் பொலிஸாரால் கண்காணிக்க முடியாதவாறும் கட்டுப்படுத்த முடியாதவாறும் போராட்டங்கள் கைமீறியுள்ள நிலையிலேயே, பிரிட்டனில் பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக கனேடிய வெளிவிவாகர அமைச்சு தெரிவித்துள்ளது.

பிரிட்டனில் தற்போது நிலைமை இயல்பில் இல்லை. அங்கு நாளுக்குநாள் பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் அதிகரித்து வருகின்றன. எனவே பிரிட்டனுக்குப் பயணம் மேற்கொள்வது தொடர்பில் கனேடியர்கள் சிந்தித்துச் செயற்படவேண்டும். அத்துடன், பிரிட்டனில் உள்ள கனேடியர்கள், எந்நேரத்திலும் அங்கிருந்து வெளியேறுவதற்குத் தயாராக தங்களின் பயண ஆவணங்களை வைத்திருக்கவேண்டும் என்று கனேடிய வெளிவிவகாரத்துறை மேலும் தெரிவித்துள்ளது. (ம)

பாராட்டி வாழ்த்துகின்றோம்




திரு. இரத்தினம் ஜெயராமன்

தோப்புக்காடு காரைநகர்

(முன்னாள் C.T.B. சாலைப் பரிசோதகர்)

அவர்கள் அகில இலங்கைச் சமாதான நீதவானாக 03.07.2024 அன்று வடமாகாண மேல் நீதிமன்ற நீதிபதி உயர் திரு. D.S. சூசைதாஸ் அவர்கள் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் காரைநகர் மத்தியஸ்த சபையில் 12 வருடங்களுக்கு மேல் உப தவிசாளராகவும், உறுப்பினராகவும், ஜன்ஸ்ரீன் சனசமூக நிலையப் பொருளாளராகவும், காரை தெற்கு, கிராம சக்தி மக்கள் சங்கத் தலைவராகவும் செயலாற்றி வருகின்றார்.

மேலும் இவர் தோப்புக்காடு கிராம அபிவிருத்திச் சங்கம், தோப்புக்காடு சிறி சுப்பிரமணிய சுவாமி கோவில், விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கம், விசுவமடு ஏற்று நீர்பாசன விவசாயிகள் சம்மேளனம் ஆகியவற்றின் முன்னாள் தலைவராவார். மற்றும் காரைநகர் சைவ மகாசபை, காரைநகர் வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஆகியவற்றின் முன்னாள் நிர்வாக உறுப்பினரும் ஆவார். அவர் பல ஆண்டு வாழ்ந்து சமூக சேவையாற்ற இறைவனை வேண்டி பாராட்டி வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:

ஜன்ஸ்ரீன் சன சமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களும், பொதுமக்களும்.

55873 (N-I)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னை அபிவிருத்திச் சபையால் தொலைபேசி இலக்கம் அறிமுகம்

கொழும்பு, ஓக. 6
தெங்குப்பயிர்ச்செய்கையின் ஏற்படும் பிரச்சினைகள் தொடர்பாக அறிவிப்பதற்காகத் துரித தொலைபேசி இலக்கம் தென்னை அபிவிருத்திச் சபையால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
இதற்கமைய, 1916 எனும் துரித இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு தெங்குப் பயிர்ச்செய்கையின் போது ஏற்படும் பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளமுடியும் என தென்னை அபிவிருத்திச் சபை தெரிவித்தது.
இதேவேளை- தெங்குப் பயிர் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளுக்காகப் புதிய தொலைபேசி செயலி ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளதாகவும் தென்னை அபிவிருத்திச்சபை குறிப்பிட்டுள்ளது. (ஒ-45-66)



## மெட்டாவுக்கு பணத்தை அள்ளி இறைக்கும் ரணில்

கொழும்பு, ஓக. 6
மெட்டா சமூக வலைத்தளம் ஊடான விளம்பரத்துக்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதிகளவு பணத்தைச் செலவிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

Meta

கடந்த ஜூன் மாதம் 30ஆம் திகதி தொடக்கம் ஜூலை மாதம் 29ஆம் திகதி வரையிலான காலப்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க 51 இலட்சம் ரூபாவை செலவிட்டுள்ளார். ரணிலுடன் இணைந்துகொள்ளுங்கள் என்ற 44 விளம்பரங்களுக்காக 13.09 டொலரும், ஐக்கிய தேசியக் கட்சி தொண்டர்கள் என்ற 8 விளம்பரங்களுக்காக 3 ஆயிரத்து 559 டொலரும் செலவிடப்பட்டுள்ளன. ஜனாதிபதி ஊடகப்பிரிவின் 17 விளம்பரங்களுக்காக 661 டொலர் செலவிடப்பட்டுள்ளது.
மற்றொரு ஜனாதிபதி வேட்பாளரான விஜயதாஸ ராஜபக்சவுக்குச் சார்பாக 10 விளம்பரங்களுக்காக 2 ஆயிரத்து 323 டொலரையும், அநுரகுமார 54 விளம்பரங்களுக்காக 354 டொலரையும் செலவிட்டுள்ளனர். (ஒ-6)

## சின்னஞ்சூட்டும் நிகழ்வு

கிளிநொச்சி, ஓக. 6
பளை மத்திய கல்லூரியில் சாரணர்களுக்கான சின்னஞ்சூட்டும் நிகழ்வு கல்லூரி அதிபர் கு. ரவீந்திரா தலைமையில் நேற்று திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.
இந்த நிகழ்வில் புதிதாக இணைந்த சாரண மாணவர்களுக்கு சின்னங்கள் அணிவிக்கப்பட்டன.
நிகழ்வில் பிரபல தொழிலதிபர் மற்றும் சமூக சேவகர் நடேசபிள்ளை காந்தரூபன் பிரதம விருந்தினராகவும், கிளி. மாவட்ட சாரண ஆணையாளர் சி. விக்னேஸ்வரன் விருந்தினராகவும், பளை கோட்ட உதவிச்சாரண ஆணையாளர் த. நிர்மல், சாரணிய உயர் விருதான ஜனாதிபதி விருது பெற்ற யோ. கோமகள், உதவி அதிபர், பகுதித்தலைவர் மற்றும் ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ரி-113)

## அர்ச்சுனாவுடன் மருத்துவமனைக்குள் அத்துமீறியோரை விசாரிக்கப் பணிப்பு

மன்னார், ஓக. 6
மருத்துவர் அர்ச்சுனாவுடன் மன்னார் பொதுமருத்துவமனைக்குள் நுழைந்து காணொலிகளை எடுத்த இரு இளைஞர்கள் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸாருக்கு நீதிமன்று பணித்துள்ளது.
கடந்த வெள்ளிக்கிழமை இரவு சாவகச்சேரி மருத்துவமனையின் முன்னாள் பதில் மருத்துவ அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா மன்னார் மருத்துவமனைக்குள் அத்துமீறி நுழைந்து காணொலிகளை எடுத்திருந்தார். இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக அவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.
இவரது பிணை விண்ணப்பம் நகர்த்தல் பத்திரம் ஊடாக நேற்று நீதிமன்றுக்கு நகர்த்தப்பட்டபோதும் அது நிராகரிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் கடந்த வெள்ளிக்கிழமை, மருத்துவர் அர்ச்சுனாவுடன் மருத்துவமனைக்குள் அத்துமீறி இரு இளைஞர்கள் நுழைந்து காணொலிகளை பதிவு செய்ததாக மன்றின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்ட நிலையில், இருவர் தொடர்பிலும் விசாரணைகளை முன்னெடுத்து, விசாரணை அறிக்கைகளை நாளை மன்றில் சமர்ப்பிக்க பொலிஸாருக்கு மன்று பணித்துள்ளது. (ஒ-26)

## கண்ணகைக்கு இன்று தேர்!

யாழ்., ஓக. 6
வடமராட்சி துன்னாலை ஸ்ரீ மிந்திரன் கண்ணகை அம்பாள் தேர் உற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை காலை 6 மணி முதல் கிரியைகள் நடைபெற்று முற்பகல் 10 மணியளவில் அம்பாள் இரதம் ஏறி வீதிவலம் வருவார். (ஒ-100)


## ஆடிப்பூர உற்சவம்!

யாழ்ப்பாணம், ஓக. 6
துன்னாலை வடக்கு நவிட்டான்பதி மனோன்மணி சக்தி சமேத காளிகாம்பாள் தேவஸ்தான ஆடிப்பூர உற்சவம் நாளை புதன்கிழமை இடம்பெறவுள்ளது.
நாளை மாலை 6 மணிக்கு அபிஷேகம் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து ருது ஷோபன விழா நடைபெற்று பின்பு வசந்த மண்டபத்துக்கு முன்னால் அனைத்து அடியார்களுக்கும் தொப்பை வழங்கப்பட்டு விஷேட பூசையுடன் குங்குமஅர்ச்சனை இடம்பெற்று காளிகாம்பாள் உள்வீதி வலம் வந்து மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட முத்துச் சப்பரத்தில் வெளிவீதி வலம் வருவார். (ஒ-100)

## பேச்சி அம்மன் இன்று தேர்!

யாழ்., ஓக. 6
மயிலிட்டி திருப்பூர் அருள்மிகு பேச்சி அம்மன் ஆலய வருடாந்த பெருந்திருவிழாவின் தேர்த் திருவிழா இன்று இடம்பெற உள்ளது. (ஒ-100)

## இளையோரை வலுவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு




யாழ்ப்பாணம், ஓக. 6
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலுள்ள ஏ.ஐ.ஈ.எஸ்.ஈ.சி. அமைப்பால் கடந்த 3ஆம் திகதி இளைஞர்களை வலுவூட்டும் விழிப்புணர்வு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.
பால் சமத்துவம் மற்றும் மன நலனை மேம்படுத்துவதன் மூலம் பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்களை வலுவூட்டுவதை நோக்கமாகக்கொண்ட 'வொய்ஸஸ் அன்பவுண்ட்' என்ற விழிப்புணர்வு நிகழ்வு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக ஏ.ஐ.ஈ.எஸ்.ஈ.சி. ஆல் யாழ்ப்பாணப் பொதுநூலக கேட்போர் கூடத்தில் நடத்தப்பட்டது.
இந் நிகழ்வுக்கு யாழ். பிராந்தியத்தில் உள்ள பல்வேறு பாடசாலைகளில் இருந்து உயர்தர வகுப்பு மாணவர்கள் பங்கேற்றனர்.
பிரதம விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரியின் மூத்த விரிவுரையாளர் கலாநிதி திருமதி ஜெயலட்சுமி உதயகுமார் கலந்துகொண்டார். முதன்மைப்பேச்சாளராக பெண்கள் மனித உரிமைகள் பாதுகாவலர் திருமதி நளினி ரட்ணராஜா பங்கேற்றார். (ஒ-இ)



## வில்லூன்றியில் பலர் பிதிர்க்கடன் நிறைவேற்றம்

யாழ்ப்பாணம், ஓக. 6
ஆடி அமாவாசை விரதத்தை முன்னிட்டு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை வில்லூன்றி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் சிறப்புப் பூசை வழிபாடுகள் இடம்பெற்றதைத் தொடர்ந்து விநாயகப் பெருமான் ஊர்வலமாக எழுந்தருளி வில்லூன்றிப் புனித தீர்த்தக் கேணியில் காலை 8.30 மணியளவில் தீர்த்தவாரி இடம்பெற்றது.
அதனைத் தொடர்ந்து நூற்றுக்கணக்கான அன்பர்கள் தர்ப்பணங்கள் செய்துகொண்டு வில்லூன்றிப் புனித தீர்த்தக் கேணியில் நீராடி இறந்த தமது தந்தையர் மற்றும் முன்னோர்களுக்கான பிதிர்க்கடன்களை நிறைவேற்றிக்கொண்டனர். (ஒ-66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்களாதேஷில்...

அரசியல் குழப்பங்கள் நிலவி வருகின்றன. அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலையடுத்து, பிரதமர் ஷேக் ஹசீனாவின் அரசாங்கம் பல்வேறுபட்ட சட்டங்களை நடைமுறைப்படுத்தியது. அவற்றில், 'அரசவேலை இடஒதுக்கீட்டுச்சட்டமும்' ஒன்றாகும். இந்தச் சட்டம், பங்களாதேஷ் அரசவேலைகளில், நாட்டின் சுதந்திரத்துக் காகப் போராடியவர்களின் குடும்பத்தினருக்கு 30 வீதமான வேலை வாய்ப்பு களை வழங்குவதற்கு வழிவகைகளைச் செய்கின்றன. இதையடுத்து, 'திறமையின் அடிப்படையிலேயே வேலை வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்' என்று வலியுறுத்தி இலட்சக்கணக்கான மக்கள், குறிப்பாக இளைஞர்கள் பங்களாதேஷ் எங்கும் போராட்டத்தில் ஈடுபட்டனர். பங்களாதேஷ் உச்ச நீதிமன்றத்தில் இது தொடர்பான வழக்கில், அரசாங்கம் கொண்டுவந்த வேலைவாய்ப்பு ஒதுக்கீட்டுச் சட்டத்தை இரத்துச் செய்து தீர்ப்பிடப்பட்டது.

இதன்பின்னர் போராட்டங்கள் ஓய்ந்து, நாடு சுமுக நிலையை அடைந்தபோதிலும், முன்னைய போராட்டங்களை ஒழுங்கமைத்த மாணவர் அமைப்புகளுக்கு பிரதமர் ஷேக் ஹசீனா நிரந்தரத் தடைகளை அறிவித்தார். இதையடுத்தே, பிரதமர் ஹசீனா பதவி விலகவேண்டும் என்று வலியுறுத்தி போராட்டங்கள் வெடித்தன. மூன்று இலட்சம் இளைஞர்கள் இன்று பிரதமர் அலுவலகத்தை முற்றுகையிட முயன்றதையடுத்து ஷேக் ஹசீனா பதவி விலகினார். அவர் ஏற்கனவே தயார் நிலையில் இருந்த ஹெலிக்கொப்டரில் பிரதமர் மாளிகையை விட்டு வெளியேறி, பின்னர் விமானம் மூலம் இந்தியாவுக்குப் பயணித்து இந்தியாவில் தஞ்சமடைந்துள்ளார்.

ஷேக் ஹசீனா நாட்டைவிட்டு வெளியேறியதையடுத்து அரசாங்கத்தை இராணுவம் பொறுப்பெடுத்துள்ளதுடன், இடைக்கால அரசாங்கமொன்று அமைக்கப்பட பேச்சுகள் நடத்தப்பட்டு வருகின்றன. (அ-ம)





## தபால்மூல...

கொண்டே இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நேற்றுத் திங்கட்கிழமை நள்ளிரவு 12 மணியுடன் முடிவடையவிருந்த தபால் மூல வாக்களிப்பு விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் கால அவகாசம் ஓகஸ்ட் மாதம் 9 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன் ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (அ-ம)

## சிசுவின்...

செல்லப்பட்டது. அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக தெல்லிப்பழை ஆதார மருத்துவமனைக்கு மாற்றப்பட்டிருந்தநிலையில், சிசு ஏற்கனவே உயிரிழந்துவிட்டது என்று தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருத்துவர்கள் உறுதிப்படுத்தியிருந்தனர்.

அளவெட்டியைச் சேர்ந்த சசிரூபன் நிகாஸ் என்ற 45 நாள் சிசுவே உயிரிழந்தது. வலிகாமம் கிழக்கு திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் இறப்பு விசாரணைகளை மேற்கொண்டார். சிசுவின் உடலில் காயங்கள் காணப்பட்டதை அடுத்து சிசுவின் இறப்பில் சந்தேகம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சிசுவின் உடற்கூற்றுப் பரிசோதனை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. உடற்கூற்றுப் பரிசோதனையில் சிசுவின் கால் எலும்பில் முறிவு இருந்ததும், தலைக்குள்ளும், காது, வாய் என்பவற்றின் உட்புறங்களிலும் காயங்கள் இருந்தமையும் கண்டறியப்பட்டது. தாயிடம் மேற்கொள்ளப்பட்ட முதற்கட்ட விசாரணையில் சிசு பால் அருந்தாததால் கால்களை முறுக்கினேன் என்று தெரிவித்திருந்தார். விசாரணைகளை அடுத்துத் தாய் கைது செய்யப்பட்டார்.

தாயிடம் பொலிஸார் மேற்கொண்ட தொடர் விசாரணைகளில், சிசுவைக் கடுமையாகத் தாக்கியதை ஒப்புக்கொண்டுள்ளார். சிசு தொடர்ச்சியாக அழுது கொண்டிருந்ததால் தலையைச் சுவரில் மோதித் தாக்கியமையையும், காதுக்குள் பிரம்பை விட்டு குத்தியமையையும் தாய் ஒப்புக்கொண்டுள்ளார்.

சிசுவின் கால் எலும்பு முறிவு நாட்பட்டதாகக் காணப்படுகின்றது என்று உடற்கூற்றுப் பரிசோதனையில் கண்டறியப்பட்டுள்ளது. தாய் தனது வாக்குமூலத்தில் சிசுவின் காலை மிதித்ததையும் ஒப்புக்கொண்டுள்ளார். அதனால்ஏற்பட்ட எலும்புமுறிவை அடுத்தே சிசு தொடர்ச்சியாக அழுதிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகின்றது.

தாயிடம் வாக்குமூலம் பெறப்பட்டதை அடுத்து, நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 7 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். தாயை மனநல மருத்துவரிடம் பரிசோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பழை குற்றத்தடுப்புப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-26)

## பொதுவேட்பாளர்...

ஸ்ரீலங்கா ஜனாதிபதித் தேர்தல் செப்ரெம்பர் மாதம் 21ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில், இந்தத் தேர்தலில் தமிழர் தரப்பில் பொதுவேட்பாளர் ஒருவரைக் களமிறக்க தமிழ்த் தேசியக் கட்சிகளும் சிவில் குழுக்களும் நீண்டகாலமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றன.

பொதுவேட்பாளராகப் போட்டியிடுவதற்கு மூன்று வேட்பாளர்களின் பெயர்கள் தெரிவுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களில் ஒருவரின் பெயர் நேற்று வெளியிடப்படுமென அறிவிக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பில் தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பினர் நேற்று ஒன்றுகூடி நீண்டநேரம் விவாதித்துள்ளனர். எனினும் நேற்று இறுதியான முடிவை எடுக்கமுடியாததால் பொது வேட்பாளர் யாரென்பதை, நாளை புதன்கிழமை வெளியிடுவோம் என தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு உறுப்பினர்கள் அறிவித்தனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது, "யாழ்ப்பாணத்தில் இன்று (நேற்று) கூடிய தமிழ்த் தேசியப் பொதுக்கட்டமைப்பு தமிழ்ப் பொதுவேட்பாளரை இறுதி செய்யும் கலந்துரையாடல்களில் ஈடுபட்டது. தமிழ்ப்பொதுவேட்பாளராகக் களமிறக்குவதற்குப் பரிந்துரைக்கப்பட்டவர்களில் இருந்து ஒருவரைத் தெரிவு செய்வதற்காக பல மணிநேரமாக ஆலோசனை நடத்தியபோதும், பொதுவேட்பாளரை இறுதி செய்ய முடியவில்லை. ஆனால், விரைவில் இது தொடர்பில் இறுதியான தீர்மானங்கள் எடுக்கப்பட்டு விரைவில் இது தொடர்பான அறிவிப்பு வெளியிடப்படும்" - என்றுள்ளது. (அ-ம-20-26)

## மருத்துவர்...

மன்னார் மருத்துவமனைக்குள் கடந்த வெள்ளிக்கிழமை இரவு அத்துமீறி நுழைந்து வீடியோக்களைப் பதிவு செய்தமை, கடமையிலிருந்த மருத்துவர்கள் மற்றும் மருத்துவமனைப் பணியாளர்களை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுகளைச் சுமத்தி மருத்துவமனை நிர்வாகம் மன்னார் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், அர்ச்சுனாவை மறுநாள் சனிக்கிழமை கைது செய்து வாக்குமூலங்களைப் பெற்றுக்கொண்ட பின்னர், நீதிவான் முன்னிலையில் முற்படுத்தினர். அதற்கு அமைவாக அவரை நாளை புதன்கிழமை வரையில் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டிருந்தார்.

இந்த நிலையில் மருத்துவர் அர்ச்சுனா நீரிழிவு நோயாளி என்றும் அவருக்குப் பிணை வழங்க வேண்டும் எனக் கோரி நேற்றுத் திங்கட்கிழமை மூத்த சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் மன்னார் நீதிவான் நீதிமன்றில் நகர்த்தல் பத்திரத்தைத் தாக்கல் செய்தார்.

இதன்போது வாதி தரப்பு சட்டத்தரணிகள் பிணை வழங்கலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இருபக்க வாதங்களுக் கும் செவிமடுத்த நீதிவான் பிணை மனுவை நிராகரித்தார். மருத்துவர் அர்ச்சுனா நாளை புதன்கிழமை மன்னார் நீதிமன்றில் முன்னிலைப் படுத்தப்படுவார் என்பது குறிப்பிடத் தக்கது. (அ-ஒ-26-60)

## வாள்கள்...

சுன்னாகம் பொலிஸாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் ஏழாலை மேற்கில் உள்ள புளியங்கிணற்றடி என்ற பகுதியில் இருந்தே இந்த வாள்களும், முகமூடிகளும் மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகள்பொலிஸாரால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (அ-ம-27)

## கிணற்றிலிருந்து...

சடலமாக மீட்கப்பட்டுள்ளார். குடும்பத்தாருடன் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற மரணச் சடங்குக்கு இவரும் சென்றிருந்தார். இவர் கடந்த 31ஆம் திகதி வீடு திரும்பியுள்ளார். ஏனையவர்கள் நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக்கிழமையே வீட்டுக்குத் திரும்பியுள்ளனர்.

இந்தநிலையில் அன்றையதினம் இரவு கிணற்றில் தண்ணீர் எடுக்க மகள் சென்ற போது அவர் சடலமாகக் காணப்பட்டுள்ளார். இதுதொடர்பில் வழங்கப்பட்ட தகவலை அடுத்து சம்பவ இடத்துக்கு நேற்றுச் சென்ற பருத்தித்துறை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி சதானந்தம் சிவராஜா விசாரணைகளை மேற்கொண்டார். (அ-ஒ-100)

## எதிரணியில்...

துள்ளனர். அத்துடன், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெறும் ஆளுங்கட்சிக் குழுக் கூட்டத்தைப் புறக்கணிப்பதற்கும் நாமல் தரப்பினர் முடிவெடுத்துள்ளனர்.

அதேபோல நாமல் ராஜபக்ச அணியில் உள்ள எம்.பி.க்கள் இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்கள் இவ்வாரம் தமது அமைச்சுப் பதவிகளைத் துறக்கவுள்ளனர் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (அ-ம-44)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்நீதிமன்ற உத்தரவை பின்பற்றுவது அவசியம்

## சபாநாயகருக்கு சட்டமா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக. 6
பொலிஸ்மா அதிபர் விவகாரத்தில் உயர்நீதிமன்றத்தின் உத்தரவை சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன பின்பற்றவேண்டும் என சட்டமா அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் சட்டமா அதிபரிடம் சபாநாயகர் ஆலோசனை கோரியிருந்த நிலையிலேயே சட்டமா அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பொலிஸ்மா அதிபர் விவகாரம் தொடர்பில் முழுமையான ஆலோசனை அறிக்கையை தயாரிக்கும் நடவடிக்கைகளை சட்டமா அதிபர் திணைக்களம் முன்னெடுத்துள்ளது. சமீபத்திய சட்டச்சிக்கல்களின் மத்தியில் சபாநாயகர் எவ்வாறான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்பது தொடர்பாக இந்த அறிக்கை வழிகாட்டுதல்களை வழங்கும் என்று தெரிவிக்கப்படுகின்றது.


அதேவேளை, இந்த விவகாரம் தொடர்பில் பிரதம நீதியரசரின் ஆலோசனைகளை பெறப்போவதில்லை என சபாநாயகர் அண்மையில் நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார். (எ-இ)

# உளவுத் தம்பதியை வரவேற்றார் புடின்




மொஸ்கோ, ஓக. 6
அமெரிக்காவில் இருந்து விடுவிக்கப்பட்ட ரஷ்ய உளவுத் தம்பதியை, ரஷ்ய அதிபர் புடின் மொஸ்கோ விமான நிலையத்துக்கு நேரில் சென்று வரவேற்றுள்ளார். அவர்களை ஆரத்தழுவி தன் மகிழ்ச்சியையும் புடின் வெளிப்படுத்தினார். (ம)

வங்கி மீதி வசதி
(SHOW MONEY)
சகல நாடுகளுக்குமான விசாவினை உறுதிப்படுத்திக்கொள்ள குறைந்த கட்டணத்தில் வங்கி மீதி வசதிகள்
தொடர்புகளுக்கு:
074 173 7684

பணியாளர் தேவை

யாழ். நகரின் மையத்தில் இயங்கும் பத்திரிகை நிறுவனத்திற்கு
1. அச்சு இயந்திர இயக்குனர் (மெசின் மைண்டர்) தேவை.
2. அச்சு இயந்திர உதவியாளர்
பழக விரும்புபவர்களும் விண்ணப்பிக்கலாம்.
வெளி மாவட்டத்தினருக்கு தங்குமிட வசதி உண்டு.
ஆர்வம் உள்ளவர்கள் எதிர்வரும் 08.08.2024 காலை 9.00 மணிமுதல் பி.ப 01.00 மணிவரை நேரில் சமுகம் தரவும்.
உதயன் பணிமனை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்

பிறப்பு 11 . 06 . 1944



இறப்பு 04 . 08 . 2024

### பொன்னம்பலம் ஜெயராஜசிங்கம் (ஜெயராஜ்)

மலேசியாவை பிறப்பிடமாகவும், சண்டிலிப்பாயை வளர்விடமாகவும், லண்டனை வதிவிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் ஜெயராஜசிங்கம் (ஜெயராஜ்) நேற்றுமுன்தினம் (04.08.2024) ஞாயிற்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான Dr. மயில்வாகனம் - இந்திராணி தம்பதியரின் அன்பு மருமகனும், கௌஷல்யாவின் அன்புக் கணவரும், பிரவீன், பிரமிலா ஆகியோரின் பாசமிகு தந்தையும், மைவிழி, மயூரன் ஆகியோரின் மாமனாரும், மதுறிஷாவின் பாட்டனும், தவமலர் (கனடா), காலஞ்சென்ற தவபாலசிங்கம் (லண்டன்) மற்றும் பத்மமலர் (தாவடி), காலஞ்சென்ற ராஜசிங்கம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்றவர்களான குலசிங்கம், வாஹீஸ்வரி, சிவபாதசுந்தரம், மங்கையர்கரசி, துஷ்யந்தி, அஜந்தா, ஷோபனா ஆகியோரின் மைத்துனரும், குமார், ரவி, ஷர்மேன் ஆகியோரின் சகலனும், தவராஜ், பத்மராஜ், குலராஜ், சிவரூபன், தர்ஷன் ஆகியோரின் அன்பு மாமாவும், ஸ்ரீகாந்த், அஞ்சலா, மஞ்சுளா ஆகியோரின் சித்தப்பாவும், நவீனின் பெரியப்பாவும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்

தொடர்பு : 077 327 6462
0044 772 240 9673 (cs.55875) (N-1)

தகவல்
S. பத்மமலர்

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 15 . 04 . 1932



மறைவு 19 . 07 . 2023

### அமரர் கந்தையா சரவணமுத்து

எமக்கு ஒளிவிளக்காய் ஒளியூட்டி
உழைப்பிற்கோர் உதாரணமாய் வாழ்ந்து
அரவணைத்து அன்பினால் எமையாண்டு
அன்புடன் பண்பு சேர்த்து எமை வளர்த்து
அகிலத்தில் செழிப்புடன் வாழ
எமக்கு பல வழி காட்டி
எம் உயர்ச்சிக்கு உந்துசக்தியாய்
அரிய பல அறிவுரைகள் நிதம் கூறி
ஏர் பூட்டி உழவு செய்து
எளிமையாய் வாழ்வதன் பொருளுணர்த்தி
ஏற்றமுடன் நாம் வாழ வழிவகுத்த ஐயாவே
நீங்கள் எமை பிரிந்து ஆண்டொன்று கடந்தாலும்
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
என்றென்றும் உங்கள் நீங்கா நினைவுகளுடன்

கிராம்புவில்,
சாவகச்சேரி.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(cr.43062) (N-1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 06.08.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.